
# தன் சமூகத்தை மனதார நேசித்த உன்னத மனிதர்

# மனுவல் ஜேசுதாசன்!

கிம் அன்ரனி ஸ்டாசியுக் (Kym Anthony Stasiuk)

தமிழில்: குயின்ரஸ் துரைசிங்கம்



அன்பான குடும்பத்தினரே, நண்பர்களே, வாசகர்களே, என் மாமியார் திருமதி ஜேசுதாசன் (அம்மம்மா), என் மனைவியின் சகோதரிகள் அஜந்தா மற்றும் அனிதா, அனிதாவின் கணவர் ஏட்ரியன் மற்றும் அவர்களின் மகள் நைரீ, என் மனைவி அஜித்தா, எங்கள் பிள்ளைகள் காஸ்மன், அயன், எம்ஜே, மற்றும் அவரை மிகவும் நேசித்த அனைத்துக் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் சார்பாக, நாங்கள் அன்புடன் டடி அல்லது அப்பா என்று அழைத்த எங்கள் அன்புக்குரிய மனுவல் ஜேசுதாசனைக் கௌரவிக்கவும் நினைவு கூரவும் இப்பதிவை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

எனது மாமாவான மனுவல் ஆசீர்வாதம் ஜேசுதாசன் அர்களது இறுதி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக உலகெங்கிலும் இருந்து பயணம் செய்து வந்திருந்த மக்களைக் காண்டதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். மேலும், அப்பாவின் அற்புதமான வாழ்க்கையை நினைவுகூரவும், துயரத்தில் பங்குகொள்ளவும், அவரின் வாழ்வைக் கொண்டாடவும் நீங்கள் அனைவரும் எங்களுடன் இருந்ததை அவர் உண்மையிலேயே நன்றியுடன் ஏற்றுக்கொண்டிருப்பார் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஏற்கனவே உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி, அப்பா எல்லா வகையிலும் ஒரு சிறந்த மனிதர். அவர் 78 ஆண்டுகள் ஒரு நிறைவான, உயிரோட்டமான வாழ்க்கையை, அன்பு, குறிக்கோள், மற்றும் மக்களுடன் இணையும் அபாரமானதிறன் ஆகியவற்றால் நிரப்பி, நிறைவாக வாழ்ந்தார். 50 அற்புதமான ஆண்டுகள் அம்மம்மாவுடன் திருமண பந்தத்தில் இருந்த அவர், எங்கள் குடும்பத்தின் இதயமாகத் திகழ்ந்தார் - எப்போதும் எங்களுக்கு முன்னுரிமை அளித்து, எங்களை உற்சாகப்படுத்தி, அமைதியும் நிலையானதுமான அர்ப்பணிப்பு என்ன என்பதை வாழ்ந்து காட்டினார்.

அவர் தனது மூன்று மகள்களின் வளர்ச்சியில் மகிழ்வடைந்தார்: ஒரு மருத்துவராக குணப்படுத்துதலில் தன்னை அர்ப்பணித்த அஜந்தா, ஒரு வழக்கறிஞராக நீதிக்காகப் போராடி அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றிய அஜிதா, மற்றும் ஒரு முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் தொழில்முனைவு வணிக நிர்வாகியான அனிதா ஆகியோரைக் கண்டு பெருமிதம் கொண்டார். அவர் தனது மகள்களையும், காஸ்மன், அயன், நைரி மற்றும் எம்ஜே ஆகிய நான்கு பேரக்குழந்தைகளையும் மிகவும் நேசித்தார். அவர்களும், இங்குள்ள அவரது

மருமகன்களும் அவருக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியாக இருந்தனர். அவர்கள் வளர்வதைப் பார்ப்பது, கதைகளைப் பகிர்ந்து கொள்வது, மற்றும் குடும்பத்தின் இளைய தலைமுறையினருக்கு சந்தோசத்தைக் கொடுக்கின்ற, சிரித்து மகிழ்கின்ற, அறிவார்ந்த 'அப்பாவாக' இருப்பதை அதிகம் விரும்பினார். அவர் விலங்குகளையும் நேசித்தார் - குறிப்பாக பல ஆண்டுகளாக தங்கள் வீட்டிற்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொண்டு வந்த சாஷா, தோலா மற்றும் மிக சமீபத்தில் மைரோ ஆகிய வெவ்வேறு செல்ல நாய்களை நேசித்தார்.

இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நாவாந்துறை என்ற ஊரில் பிறந்தார், அங்குதான் அவர் அம்மம்மாவைச் சந்தித்தார். திருமணத்திற்குப் பிறகு, அவர் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் சட்டம் படிப்பதற்காக அம்மம்மாவை விட்டுப் பிரிந்திருந்தார். அவர் இலங்கைக்குத் திரும்பியதும், 1977-ஆம் ஆண்டின் இனக்கலவரங்கள் அவரது வாழ்க்கைப் போக்கை மாற்றிவிட்டன. தனது தாய் நாட்டில் வழக்கறிஞராகப் பணியாற்றும் அவரது கனவுகளுக்கு அரசியல் சூழல் மிகவும் பாதகமாக மாறியது. அதனால் 1979-இல், வேறு சிறந்த வாய்ப்புகளைத் தேடி இலங்கையைவிட்டு வெளியேற அவர் முடிவுசெய்தார்.

இறுதியில், கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள சிறிய தீவான செஷல்ஸில் சிரேஷ்ட அரச சட்ட ஆலோசகராக அவருக்கு வேலை கிடைத்தது. அங்கு அவர் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் குடும்பமாகக் குடிபெயர்ந்தார். அந்தத் தருணத்திலிருந்து, அவர் ஒரு அர்ப்பணிப்புள்ளவராக, தனது வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் தனது குடும்பத்தினருடனே செலவிட்டார். பணியிடத்திலும், வீட்டிலும், சமூகநிகழ்வுகளிலும், வெளிநாட்டுப் பயணங்களிலும், அவர்கள் ஒருவருக்கொருவர் காட்டிய நிபந்தனையற்ற அன்பைக் கண்டால், அவர்களுடைய திருமணம் நிச்சயிக்கப்பட்டது திருமணம் என்று உங்களால் ஒருபோதும் யூகிக்க முடிந்திருக்காது.

யாழ்ப்பாணத்தில் ஐரிஷ் கத்தோலிக்க பாதிரியார்களினால் நடத்தப்பட்ட புனித பத்திரிசியார் கல்லூரியில் அப்பா கல்விபயின்றார். அங்கு அவர் பிரித்தானிய கலாசாரத்தைப் பற்றி அறிந்துகொண்டார், நீதியின் மீது பேரார்வத்தையும், ஆங்கிலப் பொதுச் சட்ட அமைப்பின் மீது ஆர்வத்தையும் வளர்த்துக்கொண்டார். அந்த அடித்தளம் அவரை இங்கிலாந்தில் சட்டம் பயிலவும், இறுதியில் ஒரு வழக்கறிஞராக உருவாகவும் தூண்டியது. 1980-களில் செஷல்ஸ் வழியாக கனடாவிற்கு வந்த அவர், உறுதியுடனும் தாராள மனப்பான்மையுடனும் இங்கு ஒரு புதிய வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்.



சேவையால் வரையறுக்கப்பட்ட ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கான வாய்ப்பை கனடா அவருக்கு வழங்கியது. அவரைப் போலவே, தமிழ் சமூகத்தைச் சார்ந்த பலரும் கனடாவைத் தங்களின் பாதுகாப்பான புகலிடமாகத் தேர்ந்தெடுத்தனர். 1980-களின் நடுப்பகுதியில், அறிமுகமில்லாத மற்றும் அச்சுறுத்தலான சட்ட அமைப்பில் பயணிக்கும் அகதிகளுக்கு உதவ, தமிழ் பேசும் வல்லுநர்கள் அவசரமாகத் தேவைப்பட்டனர். ஒரு வழக்கறிஞராக, அவர்களுக்கு உதவத் தகுதியுடையவராகவும், தார்மீகக் கடமையுள்ளவராகவும் தான் இருப்பதாக அப்பா உணர்ந்தார். கனடாவில் கண்ணியம் மற்றும் ஒரு பாதுகாப்பான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பத் துடிக்கும் தமிழ் அகதிகளுக்கு உதவுவதற்காகத் தனது சட்டப் பணியை அர்ப்பணித்தார்.

அவரது தொழில் வளரவளர, அம்மம்மா அவருடன் சேர்ந்து கொண்டார். காலப்போக்கில், அவர் தனது பரபரப்பான குடிவரவுப் பணிகளுக்குமேலாக, குடும்ப மற்றும் குற்றவியல் சட்ட வழக்குகள், உயில் மற்றும் சொத்து வழக்குகள், நிலம் மற்றும் வணிகப் பரிவர்த்தனைகளையும் கையாளத் தொடங்கினார். ஒரு கட்டத்தில், இளம் வழக்கறிஞர்களான எனக்கும் என் மனைவிக்கும் அவர் பொறுமையுடனும் ஞானத்துடனும் வழிகாட்டி, தனது அலுவலகத்தில் பணிக்கு அமர்த்தினார். அவரது தன்னலமற்ற வழிகாட்டுதலும் ஆதரவும் இல்லாமல், இன்று நாங்கள் அனுபவிக்கும் வெற்றிகரமான சட்டத் தொழில் வாழ்க்கையை நாங்கள் அடைந்திருக்க முடியாது. மேலும், பல ஆண்டுகளாகப் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு வழிகாட்டி, இதே போன்ற அன்பு மற்றும் அக்கறையால் எண்ணற்றோருக்கு அவர் உதவினார். தமிழ் சட்டசமூகத்திற்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார். கனடாவில் உள்ள பல தமிழ் வழக்கறிஞர்களுக்கு அவர் வழிகாட்டினார். அவர் தனது சட்ட அலுவலகத்தை விற்ற பின்னரும்கூட, ஓய்வில் இருந்தபடியே வழக்கறிஞர் தொழிலைத் தொடர்ந்தார், சமூக உறுப்பினர்களுக்கான சிறப்பு வழக்குகளைக் கையாண்டார்.

புலம்பெயர் தமிழர்களிடையே, அப்பா மிகவும் நேசிக்கப்பட்ட ஒருவராகத் திகழ்ந்தார். அவர் பல கட்டுரைகளை எழுதினார், சமூகத்தைப் பாதிக்கும் சட்ட மற்றும் பிறவிடயங்கள் குறித்து வானொலி மற்றும் தொலைக்காட்சியில் தனது குரலைப் பகிர்ந்துகொண்டார். தனது வாடிக்கையாளர்களுடனான அவரது உரையாடல்கள், அவர்களின் போராட்டங்கள், மனவுறுதி மற்றும் வெற்றிகளைப் பற்றி அறிந்து கொண்டார். இப்படி அறிந்துகொண்ட அனுபவப் பகிர்வுகள், புதிய குடிவரவாளர்கள் எதிர்கொள்ளும் சட்ட மற்றும் உணர்ச்சிபூர்வமான சவால்களைப் பிரதி பலிக்கும் ஒரு நாவலையும் சிறுகதைத் தொகுப்பையும் எழுத அவரைத் தூண்டியது.

இளைஞராக இருந்தபோது, மிகப் பழமையான, ஏன்... தொன்மையான, செவ்வியல் தமிழ் நூல்களின் இருப்பிட மான வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணப் பொது நூலகத் தில் அவர் பணியாற்றினார். அக்காலத்தில் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்த அனைத்துப் புதிய நூல்களையும் பதிவு செய்து பட்டியலிடுவதே அவரது பணியாக இருந்தது. இது வும், அவரது புனித பத்திரிசியார் கல்லூரி வழங்கிய கல்வி யறிவும் தான், அவருக்கு அத்தகைய அழகான, நேர்த்தியான கையெழுத்து இருப்பதற்குக் காரணமாக அமைந்தது.

யாழ். பொது நூலகம் துயரமான முறையில் தீக்கிரையான போது, அந்த வேதனையான நினைவு, அவரது வாழ்நாள் பணிகளில் ஒன்றைத் தொடங்க உதவியது. தமிழ் இலக்கி யத் தோட்டத்தில் தனது தலைமைத்துவத்தின் மூலம், எழுத வும் பேசவும் பாவிக்கப்படும் தமிழ் மொழிமூலசொற்களின் முக்கியத்துவத்தைப் பற்றிய ஆழமான புரிதலை அவர் வெளிப்படுத்தினார். மற்றவர்களுக்குக் கல்வி கற்பிப்பதிலும், தமிழ் மொழி, கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் செழு மையை மேம்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் அவர் ஒரு தீவிரமான ஆதரவாளராக இருந்தார்.

அவர், புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளையின் தலைவராகப் பணியாற்றியுள்ளார். அண் மையில், ஒன்ராறியோ முதுதமிழர் மன்றத்தின் தலைவராகப் பணியாற்றி, பலருக்கும் மகிழ்வையும் பிணைப்பையும் ஏற் படுத்திய நிகழ்வுகளை நடத்தினார். கற்றல் அமர்வுகள் மற்றும் வெளிநாட்டுக் குழுப் பயணங்களைக்கூட ஏற்பாடுசெய்தார்.

பல ஆண்டுகளாக, அவர் தனது சமூகத்திற்குப் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியதை ஒரு பெரும் கௌரவமா கக் கருதினார். புனித பத்திரிசியார் கல்லூரி பழையமாணவர் சங்கத் தலைவராக, சேக்கம் சமூகசேவை அமைப்பின் செய லாளராக, ஒன்ராறியோ முதுதமிழர் மன்றத் தலைவராக, கனடா திருமறைக்கலாமன்றத்தின் தலைவராக, மற்றும் 1995-இல் ரொறன்ரோ மாநாட்டு மையத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மூன்று நாள் சர்வதேச தமிழ் பண்பாட்டு மாநாட்டை ஏற்பாடுசெய்த சர்வதேச தமிழ் பண்பாட்டு இயக் கத்தின் செயலாளராக என, சமூகப் பணிகளில் முழுமூச்சு டன் ஈடுபட்டிருந்தார்.

அப்பாவுக்கு ஒரு படைப்பாற்றல் மிக்க ஆன்மா இருந்தது. அவர் 'கூத்து' எனும் பாரம்பரிய தமிழ் நாட்டுக்கூத்துக்கலை உட்பட பலநாடகங்களில் நடித்தார். பல ஆண்டுகளாக அவர் திருமறைக் கலாமன்றத்தில் ஈடுபட்டிருந்தார். அங்கு அவர் தனது கலைத் திறமைகளை வெளிப்படுத்தி, தமிழ் நாடகங்களில் நடிப்பு, பாட்டு, நடனம் ஆகியவற்றால் மேடை களை ஒளிரச் செய்தார். அனைவரையும் வரவேற்று, உயிர்ப் புடன் உணரவைக்கும் அந்த மகிழ்ச்சியான, சிறந்த ஆற்ற லுடன் அவர் எப்போதும் திகழ்ந்தார். கடந்த கிறிஸ்மஸ் அன்று நடந்த தனது இறுதி நாடகத்தில், பெரும்பாலும் இந் துக்களான தமிழ் முதியவர்களுக்காக ஒரு மணிநேரத்திற் கும் மேலாக மேடையில் நடித்து, இந்துக்களுக்குக் கிறிஸ் தவத்தைப் பற்றிக் கற்பிக்கும் ஒரு கதையை அவர்களுக்கு வழங்கினார்.

தனது சட்டத் தொழில் மற்றும் சமூக ஈடுபாட்டைத் திரும்பிப் பார்க்கையில், தனது முன்னாள் வாடிக்கையாளர்களைச் சந் திக்கும்போது, 'எனது பிள்ளை ஒரு வழக்கறிஞர்' அல்லது 'எனது பிள்ளை ஒரு மருத்துவர்' என்று அவர்கள் பெருமை யுடன் கூறுவதைக் கேட்கும்போது, அதுவே அவருக்குக் கிடைத்த மிகப்பெரிய வெகுமதிகளில் ஒன்றாக இருந்தது. இந்தத் தனிப்பட்ட வெற்றியுடன், செழிப்பான ஒரு தமிழ் வணிக சமூகம் உருவாவதையும் அவர் கண்டார். அது பொருளா தார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் மட்டுமல்லாமல், அர சாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் அரசியல் ரீதியா கவும் பங்களித்து வருவதைப் பார்த்து பெருமிதமடைந்தார்.

அப்பா விருந்தோம்பலை மிகவும் விரும்பினார். ஏஜாக்ஸில் உள்ள தனது வீட்டின் கீழ்மாடியில் அவர் கலகலப்பான விருந்துகளை நடத்தினார். அங்கு, விளையாட்டு மற்றும் தமிழ் திரைப்படங்களைப் பார்ப்பதற்காக ஒரு பெரிய திரை தொலைக்காட்சி, ஒரு மரத்தாலான நடனத் தளம், மற்றும் தமிழ் இசைக்காக ஒரு அதிநவீன ஒலி அமைப்பு ஆகிய வற்றை நிறுவியிருந்தார். அப்பா விளையாட்டுகளின் தீவிர ரசிகராகவும் இருந்தார் - குறிப்பாக கால்பந்து, கிரிக்கெட் மற்றும் லீஃப்ஸ், ராப்டர்ஸ் அணிகளை உற்சாகப்படுத்து வதில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. 2019-இல் ராப்டர்ஸ் அணி சாம்பியன் பட்டம் வென்றதை, குடும்பமாக அந்த நிலக்கீழ் அறை தொலைக்காட்சியில் பார்த்தது எங்கள்



சிறந்த நினைவுகளில் ஒன்றாகும். அவர் ஒரு அற்புதமான பிங் பாங் வீரராகவும் இருந்தார். நுட்பமான சர்வ் மற்றும் வலிமையான ஓவர்ஹேண்ட் ஸ்மாஷ் ஆகியவற்றை அவர் கொண்டிருந்தார். 78 வயதிலும், அவர் எங்கள் குடும்பத்தில் டேபிள் டென்னிஸில் தோற்கடிக்க முடியாத சாம்பியனாகத் திகழ்ந்தார்.

அப்பா மக்களை மட்டுமல்ல, இயற்கையையும், செடிகளையும், பூக்களையும், மரங்களையும் நேசித்தார். குறிப்பாக, ஒவ்வொரு வசந்தகாலத்திலும், கனடாவில் கோடைகாலம் முழுவதும் அம்மாவுடன் சேர்ந்து தோட்டம் செய்வதை அவர் மிகவும் விரும்பினார்.

மொத்தத்தில், கிறிஸ்துவைப் போலவே, அப்பா பெறுவதை விட கொடுப்பவராகவே இயல்பாக இருந்தார். மேலும், தனது பலபரிசுகளையும், திறமைகளையும், வளங்களையும் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் சமூகத்தினருடன் பகிர்ந்துகொள்வதில் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை, ஏனெனில் 'ஜேசுதாசன்' என்ற பெயருக்கு நேரடிப் பொருள் 'இயேசுவைப் பின்பற்றுபவர்' என்பதாகும். அவரது ஆளுமை மிகவும் கனிவானதாகவும் வசீகரமானதாகவும் இருந்ததால், அவரை ஒரே ஒரு முறை சந்தித்தாலே மற்றவர்கள் மனதில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்திவிடுவார். புகைப்படங்களில் நீங்கள் காண்பது போலவும், உங்கள் மனதில் நினைவில் கொள்வது போலவும், அவரது புன்னகை காலத்தால் அழியாததாகவும் உண்மையானதாகவும் இருந்தது. அவர் ஒரு மிகவும் சிறந்த தனித்தன்மை கொண்ட ஆன்மா.

எல்லாவற்றிற்கும் மேலாக, மனுவல் ஜேசுதாசன் அவர்கள், அன்பானவராகவும், ஞானமுள்ளவராகவும், எல்லையற்ற சாதகமான எண்ணம் கொண்டவராகவும் இருந்தார். பிரார்த்தனையின் சக்தி, நேர்மறைசிந்தனை, ஈர்ப்புவிதிகள் மீதான நம்பிக்கை உட்பட, நாம் வாழவிரும்பும் வாழ்க்கையை கற்பனைசெய்து வெளிப்படுத்தும் திறன் நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது என்ற ஆழமான நம்பிக்கையை அவர் கொண்டிருந்தார். அவர் வாழ்ந்த மகத்தான வாழ்க்கை, இந்த உலகக் கண்ணோட்டத்தில் அவர் கொண்டிருந்த நம்பிக்கைக்கும் உறுதிக்கும் தெளிவான சான்றாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட உதாரணமாக, ரொறன்ரோவில் ஒரு நெரிசலான குடியிருப்பில் தனது இளம் குடும்பத்துடன் வசித்துவந்த போது, புடியா வீதியில் அமையவிருந்த தங்கள் வீட்டைப் பார்ப்பதற்கு முன்பே, தனது குடும்பத்தின் இளமைப் பருவத்தைக் கழிக்க விருந்த வீட்டின் துல்லியமான வரைபடத்தை அவர் கையால் வரைந்தார். தனது மனதின் ஆற்றலால் கனவுகளை நனவாக்கும் தனது திறனை நினைவூட்டும் விதமாக, அந்த வரைபடத்தை அவர் பல ஆண்டுகளுக்குப் பிறகும் பாதுகாத்துவந்தார்.

அப்பா, பிறர் சொல்வதைக் கவனமாகக் காதுகொடுத்துக் கேட்கும் குணம், தனது நகைச்சுவை உணர்வு, மற்றும் பரந்த உள்ளம் ஆகியவற்றால் மற்றவர்களை உற்சாகப்படுத்தும் ஒரு அருமையான வழியைக் கொண்டிருந்தார். கடினமாக உழைப்பது, சவாலான இலக்குகளை அடைய முயற்சிப்பது, சமூகத்திற்குத் திருப்பிக் கொடுப்பது, மற்றும் தன்னலமின்றி வாழ்ந்து குடும்பத்தைக் கவனித்துக்கொள்வது எப்படி என்பதற்கு அவர் நம் அனைவருக்கும் ஒரு உத்வேகமூட்டும் மற்றும் ஒளிமயமான உதாரணமாகத் திகழ்ந்தார். உலகெங்கிலும் உள்ள அவரது உறவினர்களும் நண்பர்களும் அவரது அன்பையும் ஊக்கத்தையும் முன்னோக்கி எடுத்துச் செல்வார்கள்.

தனிப்பட்டமுறையில், அப்பா எனக்கு ஒரு இரண்டாவது தந்தை போல ஆனார். மேலும், என்னை தன் சொந்த மகனைப் போலவே நேசித்தார். பல ஆண்டுகளாக நாங்கள் ஒரு வலுவான பிணைப்பை வளர்த்துக் கொண்டோம் - நாங்கள் ஒன்றாகப் பயணம் செய்தோம், விளையாட்டு நிகழ்வுகளில் கலந்துகொண்டோம், ஒன்றாகச் சட்டம் பயின்றோம், நாங்கள் படித்த புத்தகங்களைப் பரிமாறிக்கொண்டோம், ஒன்றாகச் சிரித்து மகிழ்ந்தோம், மேலும் பல குடும்ப நிகழ்வுகளை ஒன்றாகக் கொண்டாடினோம். அரசியல், வணிகம் மற்றும் சட்டம் உட்பட பல அறிவுசார் கருத்துகளையும் நாங்கள் ஆர்வத்துடன் பகிர்ந்துகொண்டோம்.

நாங்கள் வெவ்வேறு பின்னணியில் இருந்து வந்திருந்தாலும், எங்களுக்குள் 30 வயது வித்தியாசம் இருந்தாலும், எங்கள் பிணைப்பு, கலாசாரம், வயது, இனம்... காலத்தைக் கடந்தது. நாங்கள் முதன்முதலில் சந்தித்த கணத்திலிருந்தே அவர் ஒரு சிறப்பான மனிதர் என்பதை நான் அறிந்திருந்தேன். ஆனால், என் வாழ்வின் துணையாக இவரது மகளை நான் மணந்தபோது, அவளுடைய தந்தை என் வாழ்வில் மிகமுக்கியமான, செல்வாக்குமிக்க மற்றும் அன்புக்குரிய நபர்களில் ஒருவராகவும், என் சிறந்த நண்பர்களில் ஒருவராகவும் மாறுவார் என்பதை நான் சிறிதும் உணரவில்லை. அவர் மறைந்ததால் நாங்கள் உணரும் வெற்றிடம் மிகப்பெரியது, அவர் இல்லாமல் எதுவும் முன்போல் இருக்காது. அவருக்கு மிகவும் நெருக்கமாக இருந்த அனைவராலும் அவர் அளவிடமுடியாத அளவிற்கு உண்மையாகவே இழக்கப்படுவார்.

அவருடைய மறைவு எவ்வளவு சோகமானதாக இருந்தாலும், உங்களுக்கு அவரைத் தெரிந்திருந்தால், அவர் எல்லையற்ற சக்திவாய்ந்த சாதகமான உணர்வாற்றலால் நிரம்பியிருந்தார் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நாம் அவருக்காகத் துக்கம் அனுசரிக்கவேண்டும் என்று அவர் எவ்வளவு விரும்புகிறாரோ, அதைவிட அதிகமாக நாம் அவரைக் கொண்டாடவேண்டும் என்றும், அவருடன் நாம் பகிர்ந்துகொண்ட சிறப்பு நினைவுகளைப் போற்றிப் பாதுகாக்கவேண்டும் என்றும் அவர் விரும்புவார் என்பதை என் இதயத்தில் நான் அறிவேன்.

மனுவல் ஜேசுதாசன் எனும் அற்புதமான பரிசை இறைவன் இவ்வுலகிற்கு வழங்கியதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். நம்முடைய இறுதி நாட்கள் வரை அவரைப் பற்றிய நமது இனிய நினைவுகளை நாம் பகிர்ந்துகொள்ளுவோம், அவருடைய சாந்தமான ஆன்மா என்றென்றும் அமைதியில் இளைப்பாறட்டும், மேலும் நமது மென்மையான இதயங்களில், அவரை நேசிக்கவும் நினைவுகூரவும் நமக்கு எப்போதும் இடமிருக்கும் என்பதை அறியச் செய்வோம்.



Kym.Anthony@thaiveedu.com

# நின்ற சொல்லர்

அ. முத்துலிங்கம்

திடீரென்று நம்மை விட்டுப் பிரிந்துபோன அருமை நண்பர் மனுவல் யேசுதாசன் பற்றி எதைத்தான் எழுதுவது? மருத்துவ மனையிலிருந்து என்னுடன் பேசினார். 'ஒன்றும் பயப்படும்படியாக இல்லை' என்ற நம்பிக்கையை அவருடைய குரல் தந்தது. இறப்பதற்கு இரண்டு நாள் முன்னதாக ஒரு குறுஞ்செய்தி அவரிடமிருந்து வந்தது. அப்பொழுதும் மருத்துவ மனையில்தான் இருந்தார். 'உங்கள் உடம்பை பார்த்துக் கொள்ளுங்கள். நான் நலமே' அப்படி எழுதியிருந்தார். ஆனால் விதி வேறுவிதமான முடிவைத் தந்தது. அந்தக் கடைசி நேரத்திலும் அவர் தன்னைப் பற்றி நினைக்கவில்லை. மற்றவரைப் பற்றியே எண்ணினார். இதுவே அவருடைய மேன்மை. மனித நேயம்.

ரொறன்ரோவில் ஒரு மாலை நேரம், சமூக மையம் ஒன்றில் தற்செயலாக அவரைச் சந்தித்தேன். அவர் பிரபலமான வழக்கறிஞர். எல்லோரும் அவரை அறிவர். நான் அவருக்கு வணக்கம் சொன்னேன். அப்படித்தான் எங்கள் முதல் சந்திப்பு நிகழ்ந்தது. அவருடைய தமிழ் பற்று எங்களை அடிக்கடி சந்திக்க வைத்தது. தமிழுக்காக ஏதாவது செய்யவேண்டும் என்ற உந்துதல் அவரிடம் இருந்தது. ஏற்கனவே கலை விழாக் கள் பல நடத்தியிருந்தார். நல்ல பாடகர். நாட்டுக்கூத்துகள் எழுதி மேடையேற்றியிருக்கிறார். இதுவெல்லாம் நான் கேள்விப்பட்டதுதான். ஆனால், என்னை முழுக்க அவர்பால் ஈர்த் தது அவர் எழுதி வெளியிட்ட '90 நாட்கள்' நாவல் என்றுதான் சொல்ல வேண்டும்.

அதைப் பாராட்டி அவருடன் பேசினேன். அகதிகளின் பிரச்சினை பற்றி விவரிக்கும் சுவையான நூல். புதிதாக கனடாவுக்கு வருபவர்களிடம் அந்தப் புத்தகத்தை படிக்கச் சொல்லி படிக்க வைத்தேன். பலர் அதனால் பயன் பெற்றார்கள். அவர் பெயர் பிரபலமாகியது. இந்தியாவிலும் அந்தப் புத்தகம் பேசப்பட்டது.

அப்போது தமிழ் இலக்கியத் தோட்டம் இலக்கியத்துக்கான பல விருதுகளை வருடாவருடம் வழங்கி வந்தது. இலக்கியத் தோட்டத்துக்கு தலைவராக திரு. மனுவல் யேசுதாசன் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் சட்டத்தரணியாதலால் இலக்கியத் தோட்டத்துக்கு ஆரம்பத்தில் ஏற்பட்ட சில சட்டக் குழப்பங்களைத் தீர்த்து வைத்தார். தமிழ் இலக்கியத் தோட்டத்தைச் சரியான பாதையில் வழிநடத்தியதுடன், விருதாளர்கள் தேர்விலும் நல்ல ஆலோசனைகள் வழங்கினார்.

இவர் கொடைவள்ளல் என்பது எல்லோரும் அறிந்ததே. தமிழையும், தமிழ் கலாசாரத்தையும் வளர்க்கும் எந்த அமைப்புக்கும் உதவினார். ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க நிதி திரட்டியபோது முன்னணியில் நின்று ஆதரவு தந்தார். தமிழ் சமூக மையம் கட்டடத்துக்கு நிதி தாராளமாக வழங்கியதுடன் மற்றவர்களுடைய பங்களிப்பையும் ஊக்குவித்தார். தமிழ் இலக்கியத் தோட்டத்துக்கும், இன்னும் பல அமைப்புகளுக்கும் தொடர்ந்து நிதியுதவி வழங்கி ஆதரித்தார்.

இவர் சட்டத்தரணியாதலால் இவரிடம் பலர் உதவி கோரினார்கள். புதிதாகக் குடியேறியவர்கள் பலரை நான் அவரிடம் ஆலோசனைக்கு அனுப்பியிருக்கிறேன். அவர்களுக்குத் தயங்காமல்





தன் நேரத்தைக் கொடுத்து அறிவுரை சொல்லியுள்ளார். ஆனால் பணம் வாங்க மறுத்துவிட்டார். இவரை நினைக்கும் போது

*'ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்.'*

என்ற திருக்குறள்தான் மனதில் தோன்றும். உயிர் வாழ்தலின் அர்த்தமே பிறருக்கு உதவுவதுதான்.

இவரும் மோனிக்காவும் எங்கள் வீட்டுக்கு அவ்வப்போது வருவார்கள். கதவு திறந்து உள்ளே வந்த நிமிடம் தொடங்கி அவர்கள் திரும்புமட்டும் வீடு சிரிப்பினால் நிறைந்திருக்கும். இவரிடம் நூற்றுக்கணக்கான வழக்குகள் வருவதுண்டு. பெயர்களைச் சொல்லாமல் சுவையான சம்பவங்களை மட்டும் கதையாகச் சொல்வார். இவர் நல்ல கதை சொல்லி. நாங்கள் விழுந்து விழுந்து சிரிப்போம்.

இவரை நினைக்கும் போதெல்லாம் 'நின்ற சொல்லர், நீடு தோறு இனியர்' என்ற வரிகள் மனதில் வரும். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் யாரோ இவருக்காக எழுதி வைத்துவிட்டுப் போனதுபோல இருக்கும். இவர் சொன்ன வார்த்தையில் எப்போதும் நிற்பவர். பழகுவதற்கு என்றென்றும் இனிமையானவர்.

ஒன்ராறியோ முது தமிழர் மன்றத்தின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவருடைய வேலைப்பளு இரண்டு மடங்காகியது. இரவும் பகலுமாக அதற்கு உழைத்தார். நிறையக் கூட்டங்களுக்கும், சந்திப்புகளுக்கும் நேரம் ஒதுக்கினார். பயணங்களும் அவருடைய நேரத்தை எடுத்தன. இத்தனை பணிகளுக்கும் நடுவில் அவர் கனடா முதியோர் நிலைமை குறித்து ஒரு நாடகம் எழுதி, இயக்கி அரங்கேற்றினார். பெருந்திரளான மக்கள் நாடகத்தைப் பார்த்துப் பாராட்டினார்கள். நான் பார்த்துவிட்டு நாடகத்தை மெச்சி அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதன் வெற்றி, இன்னும் நிறையச் செய்யவேண்டும் என்ற உத்வேகத்தை அவருக்கு அளித்தது.

ரொறன்ரோவில் இவர் வாழ்க்கையின் உச்சமான சம்பவம் ஒன்று யூலை 6, 2013 அன்று நடந்தது.

யேசுதாசனின் தந்தையார் புகழ்பெற்ற நாட்டுக்கூத்து கலைஞர். சிறுவயதில் இருந்தே யேசுதாசன் நாட்டுக்கூத்துகளில் தகப்பனாருடன் பங்கேற்றிருக்கிறார். கனடாவுக்கு குடிபெயர்ந்த காலத்திலிருந்து, தானே இயக்கிய நாட்டுக்கூத்துகள் பலவற்றை மேடையேற்றியிருக்கிறார். அப்படி ஒன்றுதான் 2013-இல் நடந்தது. கனடாவின் புகழ்பெற்ற சோனி செண்டரில் வட-அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவை நடாத்திய வருடாந்த விழாவில் 'வேந்தனின் சீற்றம்' என்ற நாட்டுக்கூத்து ஆயிரம் பார்வையாளர்களின் முன் மேடை ஏற்றப்பட்டது. 'ரொறன்ரோ ஸ்டார்' பத்திரிகையில் நாட்டுக்கூத்தையும், யேசுதாசனையும் பாராட்டி எழுதிய கட்டுரை வெளிவந்திருந்தது. 'ரொறன்ரோ ஸ்டார்' பத்திரிகை ஆசிரியர்களில் ஒருவர் இவரைப் பேட்டி கண்டு நேரிலும் பாராட்டினார். அப்பொழுது அங்கே இருந்த நான் பெருமையாக உணர்ந்தேன். இவருடைய வாழ்க்கையில் இந்த வெற்றி பெரும் புகழைக் கொடுத்ததோடு மன நிறைவையும் தந்தது. தன் தகப்பனாருக்கு இதை அர்ப்பணித்தது, தான் வாழும் வாழ்க்கையை பொருள் உள்ளதாக மாற்றியதாக அவர் உணர்ச்சி பொங்க என்னிடம் கூறியிருக்கிறார்.

இந்த நேரத்தில் என்ன ஆறுதல் வார்த்தைகளைக் கூறமுடியும். மோனிக்காவுக்கும், பிள்ளைகளுக்கும், உறவினருக்கும், நண்பர்களுக்கும் எங்கள் இதயங்கனிந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழுக்காகவும், கலைக்காகவும், மனிதநேயத்துக்காகவும் அல்லும்பகலும் ஓடியோடி உழைத்தீர்கள் அல்லவா? சற்று ஓய்வெடுங்கள், நண்பரே.



muththulingam.a@thaiveedu.com



# குடும்ப நண்பர்

கதிர் துரைசிங்கம்

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஆறாவது மகாநாடு, 1996-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் Toronto Convention Centre-இல் நடந்தபோது, திரு. மனுவல் ஜேசுதாசனை நான் முதலில் சந்தித்தேன். தன்னார்வத் தொண்டராக பணியாற்றிய எனது மகள் ராதினி மூலம், மனுவல் அவர்களின் அறிமுகம் கிட்டியது. முதல் சந்திப்பே அவரின் முப்பரிமாண ஆளுமையை வெளிப் படுத்தியது. தொழிலில் - கனடிய சட்டத்தரணி: பண்பாட்டு இயக்கத்தில்-நிர்வாகச் செயலர்: மேடையில் - நாட்டுக் கூத்துக் கலைஞர். சட்டத்தரணிகளில் பேச்சாளர்கள் ஆகவும், அரசியல்வாதிகள் ஆகவும் பார்த்திருக்கிறேன்; ஆனால் கலைஞனாக நான் சந்தித்த முதல் சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன்.

அவர் மேல் ஏற்பட்ட ஈர்ப்பு, நட்பாக மலர்ந்தது, குடும்ப நட்பாக வளர்ந்தது. சட்டத்துறையில் எனது முதல் நண்பராக மனுவல் அமைந்தார். அன்றிலிருந்து எங்கள் வீட்டு வைபவங்களை மனுவல்-மெனிக்கா இணையர்கள் அலங்கரித்தனர். அவர்கள் வீட்டு வைபவங்களில் நாங்கள் பங்கேற்றோம்.

1999-ஆம் ஆண்டு ‘90 நாட்கள்’ என்ற அவரது முதல் நாவல் மூலம், சிறந்த கற்பனை வளம்மிக்க படைப்பிலக்கியவாதியாக மனுவல் அறிமுகமானார். ‘வேந்தனின் சீற்றம்’ என்ற மனுவல் ஜேசுதாசனின் நாட்டுக்கூத்து நாடகம், 2003-ஆம் ஆண்டு ‘உதயன்’ விழாவில் மேடையேறியது. இவரின் பாட்டுடன் ஆட்டம், நடிப்பு மூன்றையும் இரசித்துக் கொண்டு இருந்த வீரகேசரி வார இதழ் ஆசிரியர் திரு தேவராஜ், ‘இவர் ஒரு தொழில் முறைக் கலைஞர் தானே’ என வினவிய போது, ‘மனுவல் ஒரு புகழ் பெற்ற சட்டத்தரணி’ என நான் கூறியதும், அவரது ஆச்சரியம் அடங்க சிறிது நேரம் எடுத்தது.

மனுவல் அவர்கள் சிறீலங்கா, இங்கிலாந்து, சீசெல்ஸ், கனடா என வெவ்வேறு கண்டங்களைச் சேர்ந்த நான்கு நாடுகளில் 50 ஆண்டுகள் சட்டத்தரணியாகப் பணிபுரிந்து, சாதனை படைத்தவர்.

2004-ஆம் ஆண்டு தாய் நாட்டில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவின் போது, பாதிக்கப்பட்டவர்களை கனடாவிற்குக் குடிபெயரச் செய்ய கனடிய அரசு முன்வந்தது. அப்போது மனுவல் தனது MJ Lawyers நிறுவன சட்டத்தரணி குழுவுடன் இணைந்து. உதவி நாடி வந்தோர்க்கு ஆலோசனை வழங்குதல், படிவம் நிரப்புதல், உறுதிப்படுத்தல் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் இலவசமாக இரண்டு மாத காலம் வழங்கி உதவியவர்.

சொல்புதிது (2006), சொற்கோவை (2010) என இரு நூல்கள் வெளிவரக் காரணமாய் இருந்த சொல் ஆக்கக் குழுவில், மனுவல் ஓர் உறுப்பினராக இருந்து பணி ஆற்றியவர். IMHO Canada-வின் ஸ்தாபக இயக்குனர் சபையில் அங்கம் வகித்த மனுவல், ஐக்கிய அமெரிக்காவில் பணியாற்றி வரும் அவரது நண்பர் DR Kanaga Sena மூலம் IMHO-வின் நற்பணிகளுக்கு தொடர்ந்து பங்களித்து வந்துள்ளார்.

மனுவல் அவர்கள், ரொறன்ரோவின் அமைப்புகள் பலவற்றில் காப்பாளர், இயக்குனர், தலைவர், செயலாளர், ஆலோசகர் என பல்வேறு பதவிகளை வகித்து, அவற்றின் மேம்பாட்டிற்குச் சேவை புரிந்தவர்.

சட்டம் மற்றும் அதன் நுணுக்கங்கள் தொடர்பாக மனுவல் ஜேசுதாசன் ‘தமிழர் தகவல்’, ‘தாய் வீடு’ ஆகிய மாத இதழ்களில் எழுதிவந்த கட்டுரைகள் மற்றும் வானொலி, தொலைக் காட்சி வாயிலாக வழங்கிய உரைகள், செவ்விகள் அனைத்தும் புதிய குடிவரவாளர்களுக்கு மட்டுமன்றி ஏனையோர்க்கும் வரப்பிரசாதமாக அமைந்தன.





மனுவல் அவர்களின் ஆற்றல்களையும் ஆளுமையையும் கருத்திற் கொண்டு 'தமிழர் தகவல்' அமைப்பு தனது 2008-ஆம் ஆண்டு விருது விழாவில் 'பன்முகப் புலமை வித்தகர்' எனும் பட்டத்தை மனுவல் ஜேசுதாசனுக்கு வழங்கி, தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவித்தது.

பண்டிதர் அலெக்சாந்தர் தனது ஆசான் எனவும், 'அதிபர்' கனகசபாபதி, 'கவிநாயகர்' கந்தவனம் இருவரும் வழிகாட்டிகள் எனவும், தனது மணிவிழா மேடையில், கூறி மகிழ்ந்த மனுவல், இம்மூவரின் குடும்ப நண்பர் மட்டுமன்றி, குடும்பச் சட்டத்தரணியாகவும் விளங்கியவர்.

கனடாவில் கற்று LLB பரீட்சை தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் Accredited (அங்கீகாரம் பெற்ற) LLB பட்டதாரிகள் என MJ Lawyers நிறுவனத்தில் Articling (பயிற்சி) பெற்ற பலர் சட்டத்தரணிகளாகி கனடாவில் தொழில் புரிகிறார்கள்.

எதையும் சிந்தித்து, துணிந்து, ஆர்ப்பாட்டம் இல்லாமல் செய்யும் மனுவல் தான் சந்திக்கும் ஒவ்வொருவரையும் தன் வசப்படுத்தும் இயல்பு கொண்டவர். இதற்கு இவரது ஆளுமையும், கலை, இலக்கிய ஈடுபாடும் அதில் உள்ள ஆற்றலும் துணை நின்றது எனலாம். மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து, அவர்களுக்கு மதிப்பளித்துப் பழகும் பண்பு, மனுவலிடம் இருந்த காரணத்தால், அவரை நண்பர்கள் அனைவரும் நெருக்கமாகவே நேசித்தார்கள். எல்லோரிடமும் தோழமையுடன் பழகும் பாங்கு, கனிவான பேச்சு, பாராட்டும் பண்பு ஆகியன அவரின் நட்பு வட்டத்தை விரிவாக்கியது.

கனடாவில் கலாசார நிகழ்வுகள் மற்றும் அமைப்புகள் பலவற்றிற்கு ஆதரவாளராகவும் அனுசரணையாளராகவும் விளங்கிய மனுவல், எனது வேண்டுகோளின் பேரில், 'மனவெளி கலையாற்றுக் குழு'; 'பவதாரணி பாரதி கலைக்கூடம்'; 'மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்', ஜேர்மனி 'வெற்றிமணி' ஆகியவற்றிற்கு ஆதரவு நல்கிவந்தவர்.

மனுவல் தனது மனைவியுடன் விடுமுறைக்காக ஸ்ரீலங்காவிற்கு சென்ற ஒரு சந்தர்ப்பத்தில், கொழும்பில் வசித்து வந்த எனது பெற்றோரையும் சகோதரர்களையும் சந்தித்ததுடன் என்னைப் பற்றிய தகவல்களையும் திரட்டி உள்ளார். அவற்றின் அடிப்படையில், 2012-ஆம் ஆண்டு என்னைப்பற்றி வெளியான 'கதிர் உலா' என்ற பாராட்டுப் பனுவலில் சிறந்த கட்டுரை ஒன்றை எழுதி, என்னை மகிழ்வித்தார். எனது பிறந்த நாள் ஒன்றிற்கு வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சமயச் சடங்கிற்கு வருகை தந்த மனுவல்-மொனிக்கா இணையர்கள், அச்சடங்கில் பங்கேற்று, எங்களை வாழ்த்தி கௌரவித்தனர்.

திருச்சபையில் ஜேசுதாசன் ஆகவும், ஆலயங்களில் ஆசீர்வாதம் ஆகவும், சமூகத்தில் மனித நேயம் நிறைந்த மனுவல் ஆகவும் வாழ்ந்தவர் 'மனுவல் ஆசீர்வாதம் ஜேசுதாசன்' அவர்கள்.

மனுவலைப் போலவே, அவரது மனைவியும் பிள்ளைகளும் தங்கள் துறைகளைக் கடந்த ஆற்றலும் பன்முகத் திறமைகளும் உடையவர்கள்.

**மொனிக்கா:** வீட்டு நிர்வாகியும், சட்ட நிறுவன நிர்வாகியும் ஆவார். **அஜந்தா:** M.D., வைத்திய கலாநிதி; பரதநாட்டிய அரங்கேற்றம் கண்டவர்; நாட்டுக்கூத்து கலைஞர். **அஜித்தா:** LLB, கனடிய சட்டத்தரணி; பரதநாட்டியத்தில் பயிற்சி பெற்றவர்; நாட்டுக்கூத்து கலைஞர். **அனித்தா:** BBA வணிக மற்றும் நிதி நிர்வாகி; பரதநாட்டியத்தில் பயிற்சி பெற்றவர்; நாட்டுக் கூத்துக் கலைஞர்; கர்நாடக இசையில் பயிற்சி பெற்றவர். மனுவல் ஜேசுதாசனின் குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் எனச் சொன்னால் அது மிகையாகாது.

'ஒன்ராறியோ முது தமிழர் மன்றத்தின்' (STC-Ontario) தலைமையை ஏற்ற மனுவல், 2024-ஆம் ஆண்டு மன்றத்தில் இடம் பெற்ற தீபாவளி நிகழ்வுக்கு என்னைச் சிறப்புப் பேச்சாளராக அறிமுகம் செய்தார். அவரின் மொழிப்பற்று, கலைத்திறன் மற்றும் மன்ற நிகழ்ச்சிகளால் கவரப்பட்டு, இந்த ஆண்டில் நான் உறுப்பினராக இணைந்தேன்.

வாரா வாரம் தொலைபேசி மூலமும், தேவைகள் நிமிர்த்தம் நேரிலும், என்னுடன் தொடர்பில் இருந்த நண்பர் மனுவல் ஜேசுதாசனை 2026 மார்ச் 17 அன்று Centenary Hospital-இல் சந்தித்தேன். என்றும் போல் மொனிக்கா அவர் அருகில் நின்றார். அஜந்தாவும் உடன் இருந்தார். சோர்வாய் இருந்த போதும், மனுவல் தனது புன்னகையை இழக்கவில்லை.

சிறிய உரையாடலின் முடிவில், 'நீங்கள் விரைவில் வீடு திரும்புங்கள், சந்திப்போம்' என்றேன், 'சரி' என்றார், மனுவல் ஜேசுதாசன்.

மார்ச் 22 அதிகாலை, மனுவல் ஜேசுதாசன் இனி ஒருபோதும் என்னைச் சந்திக்க வரமாட்டார் என்ற செய்தி அறிந்ததும்: பாவேந்தர் பாரதிதாசனின் 'துன்பம் நேர்கையில்...' என்று தொடங்கும் கவிதையில் வரும் 'அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால் ஆடிக் காட்டமாட்டாயா?' என்ற வரிகள் நினைவிற்கு வந்தன.



kathir.thuraisingam@thaiveedu.com

ஜேசுதாசன் குடும்பம் நாவாந்துறையைச் சேர்ந்தது; எங்கள் குடும்பம் குருநகரைச் சேர்ந்தது. இரத்த உறவு ஏது மில்லை; அப்படியிருக்க எவ்வாறு இவ்வளவு உறவு நெருக்கமெனப் பலர் கேட்டுள்ளனர். 1995-இல் ஜேசுதாசனின் தந்தை மனுவல் ஆசீர்வாதம் மாமா இறந்தபோது, மரணச் சடங்குக்காக நாவாந்துறைக்குச் சென்றிருந்தோம். அங்கே போனதும் பிரேதப் பெட்டியைத் தொட்டபடி அம்மா 'அண்ணன்... அண்ணன்...' எனச் சொல்லித் தொடர்ந்து அழுதபடியிருந்தா. பழையவர்களுக்குத் தெரியும்; ஆனால் இப்படி அழும் இவர் யாரெனத் தெரியாத புதிய தலைமுறையினருக்கு ஆச்சரியம்! கோவிலிலிருந்து சவக்காலைக்கு உறவினர்கள் பிரேதப் பெட்டியைத் தூக்கிச் சென்றபோது, இடைவழியில் சிறிது தூரம் நானும் பிரேதப் பெட்டிக்குத் தோள் கொடுத்துச் சுமந்துசென்றேன்; என்னையும் பலர் ஆச்சரியமாகப் பார்த்தது இன்றும் நினைவிலுள்ளது.

***

எனது அம்மா 1921-இல் பிறந்தவர். அம்மாவின் சிறுவயதிலேயே அப்பு (அம்மாவின் தகப்பன்) இறந்துவிட்டார். பெரிய - சொந்த வளவில் ஆச்சியும் அம்மாவும் பெரியம்மாவும். ஒரு கொட்டிலில் வசித்தனர். (நான் சிறுவனாக இருந்தபோதுதான் பிந்திய பெரிய கல்வீடு கட்டப்பட்டது) அதே வளவில் ஏற்கெனவே தனது தகப்பனை இழந்துவிட்ட சிறுவனான ஆசீர் மாமாவும் தாயும் இன்னொரு கொட்டிலில் வசித்தனர். ஆசீர் மாமா, அம்மா, பெரியம்மா எல்லோரும் சிறுவயது முதல் இவ்வாறு சேர்ந்தே சகோதர பாசத்துடன் வளர்ந்தனர். அக்காலத்தில் கரையூரில் வாழ்ந்த (பிற்காலத்தில்தான் குருநகர் எனப் பெயர் மாற்றப்பட்டது) கொஞ்சக் குடும்பங்கள், பிற்காலத்தில் நாவாந்துறைக்குச் சென்றுவிட்டனர். ஆசீர் மாமாவும் தாயும் அவ்வாறே நாவாந்துறைக்குச் சென்றனர்.

ஆயினும் தொடர்புகள் தொடர்ந்தன; இரு குடும்பத்தவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் வழியாகவும் இன்றுவரை நெருங்கிய அந்தப் பாசப்பிணைப்புகள் செழித்துள்ளன. ஒரு மாதத்தில் இரண்டு தடவைகளாவது முன்பு ஆசீர் மாமா எங்கள் வீட்டுக்கு வந்துபோவது எனக்கு நினைவிலுள்ளது.

***

நான் பிறந்தது 1946 மார்கழி; ஜேசுதாசன் பிறந்தது 1948 பங்குனி - இருவருக்கும் ஒன்றேகால் வருட வயது வித்தியாசம். சுவாமிக்குப் படிப்பதற்காக நுகேகொடையிலுள்ள 'யூனியறேற்' என்ற செமினரிக்கு அவனை அனுப்பி வைத்தனர் பெற்றோர்; அங்கு சில்லாலையைச் சேர்ந்த

# ஜேசுதாசனும் சூரி அண்ணனும்...!

## அ. யேசுராசா





அல்போன்சும் மாணவனாக இருந்தார். என்ன காரண மெனத் தெரியவில்லை; இருவருமே கொஞ்சக் காலத்தின் பின் செமினரியை விட்டு விலகி, ஊருக்குத் திரும்பிவிட் டனர். பிற்காலத்தில் - எழுபதுகளில் இதே அல்போன்ஸ் எனது இரண்டாவது தங்கையைத் திருமணம் செய்து, தற்போது குடும்பத்துடன் அமெரிக்காவில் வசிக்கின்றார்.

யாழ்ப்பாணம் திரும்பியபின் சம்பத்திரிசியார் கல்லூரியில் ஜேசுதாசன் கல்விகற்றார். கல்வியில் கெட்டிக்காரனா கவே இருந்தார். நாவாந்துறை சென். மேரிஸ் கழக உதை பந்தாட்ட அணியின் பி. பிரிவில் அவர் விளையாடியதைப் பார்த்திருக்கிறேன். குருநகர், பாசையூர், நாவாந்துறை ஆகிய கடலோரக் கிராமங்கள் உதைபந்தாட்டத்தில் பேர் பெற்றவை. ஜேசுதாசனும் அதில் நல்ல இரசிகனாயுமிருந் தார். பிந்திய காலங்களில் ஒரு தடவை சந்திக்கையில், 'சரசக்காவட ரொக்கட்சன் புட்போளில இங்க கலக்கி றான்... அந்தமாதிரி விளையாட்டு...!' என்று வியந்தது, இன்னும் கண்ணுக்குள் நிற்கிறது! வெளி மாவட்டங்களில் அக்காலங்களில் நான் பணியிலிருந்ததால், அவனது சிறப் பான ஆட்டத்தைப் பார்க்கக் கிடைக்கவில்லை. ரொக் கட்சன் எனது ஒன்றுவிட்ட அக்காவின் மகன்; சம்பத்திரி சியார் கல்லூரி அணியிலும், பாடும்மீன் கழக அணியிலும் புகழ் பெற்றவன்; தேசிய இளைஞர் உதைபந்தாட்ட அணியிலும் இடம்பெற்றவன்!

***

ஜேசுதாசன் படிப்பில் கெட்டிக்காரனாயினும், விஞ்ஞானப் பிரிவில் கற்ற அவர், அக்காலத்தில் சில குழப்படிகளால் ஒ.எல். சோதனையில் சித்தியடையவில்லை. மாமா கண் டித்திருக்கிறார்; 'சூரி அண்ணனைப் பார்..!' என்று என்னை உதாரணம் காட்டி அடிக்கடி அவர் கதைப்பதாகவும், கேள்விப்பட்டிருக்கிறேன். கோபத்தில் ஜேசுதாசன் வீட் டைவிட்டு வெளியேறி, குருநகரிலுள்ள எங்கள் வீட்டுக்கு வந்து அம்மாவிடம், 'மாமி.., நான் இனி இஞ்ச இருந்து படிக்கப்போறன்...' என்று சொல்லவே, அம்மாவும் சரியென்று சொன்னார். விஞ்ஞானப் பிரிவை மாற்றி கலைப்பிரிவுப் பாடங்களைப் படிக்கப்போவதாகச் சொல்லி, தானாகவே அக்கறையுடன் படித்தார். நான் அவ்வேளை ஏ.எல். சோதனை எடுத்திருந்தேன்; தபாற்கந்தோர்த் தலைவரும் தந்தியாளரும் சேவைக்கான போட்டிப் பரீட்சையும் எழுதி யிருந்தேன். ஜேசுதாசன் ஒ.எல். சோதனையில் சித்திபெற் றார். சிறிது காலத்தின்பின் எனக்கு வேலைக்கான நியமனக் கடிதம் வந்து, 1967-இன் ஆரம்பத்தில், கொழும்புத் தலைமைத் தபாற் கந்தோருக்குச் சென்றுவிட்டேன். 1968-ஆக இருக்கலாம்; ஜேசுதாசனிடமிருந்து கடிதமொன்று வந்தது. அதில், தான் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை எழுதப்போவதாகவும், பொது அறிவு, பொது விவேகம் ஆகியவற்றுக்கான வழிகாட்டி நூல்களை, அற்லஸ்ஹோல் என்ற தனியார் கல்வி நிறுவனத்தில் வாங்கி அனுப்பு மாறும் கேட்டிருந்தான். மருதானையிலிருந்த அந்த நிறு வனத்துக்குச் சென்று அவற்றை வாங்கி, பொதி அஞ்சலில் அனுப்பினேன். அந்த நுழைவுச் சோதனையில் தேறி, சட் டக் கல்லூரியில் கற்பதற்குக் கொழும்பு வந்த ஜேசுதாசன், புஞ்சி பொரளையிலுள்ள 'கத்தோலிக்க விடுதி'யில் தங்கிப் படித்தார்.

***

ஒரு நாள் சந்தித்தபோது, றாகமவுக்குக் கிட்ட கருங்கல் லால் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுக்கொண்டிருந்த கத் தோலிக்க தேவாலயத்தைப் போய்ப் பார்க்கவேண்டுமெனச் சொன்னான். அடுத்துவரும் ஞாயிறன்று போவதாக முடி வெடுத்து, அன்று தொடருந்தில் சென்று றாகமவில் இறங்கி, சுமார் ஒரு மைல் தொலைவிலுள்ள தேவத்த என்ற இடத்துக்குப் பேருந்தில் சென்றோம். சூழலும் கோவி லும் வித்தியாசமாக இருந்தன. எல்லாவற்றையும் பார்த் தபின், சிறிது நேரம் கோவிலின் உள்ளே ஜேசுதாசன் செபம் சொல்லிக்கொண்டிருந்தார்; நான் வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றேன். செபம் முடிந்து வெளியில் வந்த ஜேசுதாசன், 'அண்ணன், கோவில் சுவா மியையும் சந்தித்துவிட்டுப் போவம்' என்றார். இருவரும் சுவாமி தங்கியிருக்கும் 'அறைவீடு'க்குச் சென்றோம். நடுத் தர வயதுச் சுவாமியொருவர் அங்கு இருந்தார். ஜேசுதாசன் முதலில் அவருக்கு ஆங்கிலத்தில் வணக்கம் சொல்லி, 'நாங்கள் இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் - கோவிலைப் பார்க்க வந்தோம்' எனத் தெரிவித்தார். சிங்க ளவரான அந்தச் சுவாமி உடனே, 'Two kallaththonies are from Jaffna!' என்று சொன்னார். கோபமடைந்த நான் உடனே, 'Vijaya is the first kallaththoni in Ceylon. Our villages are in Jaffna' என்று சொன்னேன்; அவர் உடனே சிரித்துச் சமாளிக்கப் பார்த்தார். எரிச்சல் அடைந்திருந்த

இருவரும் அவருடன் தொடர்ந்து கதைக்க மனமின்றி, உடனே திரும்பிவிட்டோம். ஒரு கத்தோலிக்க மதகுருவிடம் அத்தகைய செயலை அன்று எதிர்பார்க்கவில்லை! ஆனால் நெருக்கடிகள் அதிகரித்த பிந்திய காலங்களில், மேலும் மோசமான நிலைமைகள் பலவற்றைச் சிங்களக் கத்தோலிக் கச் சூழலில் கசப்புடன் காணநேர்ந்தது! அரசாங்கத்தின் பொருளாதாரத் தடைகளுக்குள் வட பிரதேசம் இருந்தபோது, 1987-இல் இந்திய விமானங்கள் உணவுப் பொதிகளைப் போட்டன. கருணையினால் அல்ல!; தனது பூகோள அரசியல் தேவைக்காகவே இந்தியா அதைச் செய்தது என்பது வேறு விடயம். ஆனால், பொருளாதாரத் தடைகளைக் கண்டிக்காத தென்னிலங்கைச் சிங்களக் கத்தோலிக்க சமூகம் - மதகுருமார், அருட்கன்னியர்கள், பொதுநிலையினரெனப் பெரும் எண்ணிக்கையானோர் - இந்திய விமானங்கள் உணவுப் பொதிகளைப் போட்டமையைக் கண்டித்துக் கொழும்பு வீதிகளில் ஊர்வலம் போனமை, எரிச்சலுடன் நினைவுக்கு வருகிறது.

***

ஜேசுதாசனுக்கு புத்தகங்கள் வாசிப்பதில் ஈடுபாடு இருந்தது; அதிலும் ஆங்கிலக் கவிதை, கதைகளை வாசிப்பதில் கூடுதல் விருப்பம் இருந்தது. ஒருநாள் இருவரும் கொழும்பு பொது நூலகத்துக்குச் சென்றோம், பருவ இதழ்ப் பகுதியில் பலவற்றைப் பார்த்து விட்டு, புத்தகங்கள் உள்ள பகுதிக்குச் சென்று சிலவற்றைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஆங்கிலப் பகுதியில் ஒரு கவிதைத் தொகுப்பை எடுத்துப் பார்த்தபோது, சாரா ரீஸ்டேல் என்ற அமெரிக்கப் பெண் கவிஞரின் சுமார் பத்து வரிகளுக்குட்பட்ட சிறிய கவிதையொன்று என்னைக் கவர்ந்தது. அதனை ஜேசுதாசனிடம் காட்டியபோது அவருக்கும் பிடித்துக் கொண்டது; உடனே ஒரு கடதாசித் துண்டில் அக்கவிதையைக் குறித்துக்கொண்டு, நூலகத்தில் சேர்ந்து இதுபோன்ற புத்தகங்களைப் படிக்கவேண்டுமென்று சொன்னார். இது நடந்தது 1969 அல்லது 1970-களாக இருக்கலாம். கவிதை வரிகளை நான் மறந்துவிட்டேன்; ஆனால் சாரா ரீஸ்டேல் பெயர் மட்டும் இன்றும் நினைவிலுள்ளது. 2016-இல் கனடா சென்று ஜேசுதாசனின் வீட்டில் தங்கிநின்றபோது ஒருநாள், கொழும்பு பொது நூலகத்துக்குச் சென்றதை நினைவுபடுத்தியபோது, உடனே சாரா ரீஸ்டேல் பெயரைக் குறிப்பிட்டுவிட்டு, அந்தக் கவிதையையும் சொல்லிக் காட்டினார்; நான் ஆச்சரியப்பட்டேன்!

***

1975-இல் சட்டக்கல்லூரிப் படிப்பை முடித்தபின் நாவாந்துறையில் மனைவி மொனிக்காவின் வீட்டிலும் பிறகு கடற்கரை வீதியிலிருந்த ஒரு வீட்டிலும் வசித்தார்; யாழ்ப்பாண நீதிமன்றில் சட்டத்தரணியாகப் பணியாற்றினார். பிறகு 1978-இல் பரீஸ் சென்று அங்கு ஆறு மாதங்கள் இருந்தபின், இலண்டன் சென்று சொலிசிற்றர் படிப்பை முடித்தபின் 1980-இல் இலங்கை திரும்பினார். யாழ்ப்பாணத்தில் பிரதான வீதியிலுள்ள ஒரு வாடகை வீட்டில் குடும்பத்துடன் வசித்தபடி, யாழ்ப்பாண நீதிமன்றில் பணியாற்றினார். பிறகு 1982-இல் செஷெல்ஸ் தீவு சென்று நீதிபதியாகப் பணியாற்றி, 1986-இல் கனடாவுக்குச் சென்று குடியேறினார். அங்கு சட்டத்துறையிலும் சமூகச் செயற்பாடுகளிலும் அர்ப்பணிப்புடன் தொடர்ச்சியாக ஈடுபட்டு, ஒரு முக்கிய ஆளுமையாகப் பின்னர் அடையாளம் காணப்பட்டமை மகிழ்ச்சிக்குரியது. தமிழ்ச் சட்டத்தரணிகள் அதிகமில்லாத அன்றைய கனடாச் சூழலில், மனிதாபிமான உணர்வுடன் அவர் தமிழர் பலருக்குச் சட்ட உதவி வழங்கியமையைக் கேள்விப்பட்டிருக்கிறேன்; அது முக்கியமானது. சாதாரண குடும்பப் பின்னணியிலிருந்து சமுதாய ஏணியில் மேலே மேலே ஏறிச்செல்லும் பெரும் அவா, அவரிடம் ஆழமாக வேரூன்றியிருந்தது. சுய முன்னேற்றத்துக்குரிய ஆங்கில நூல்களை அடிக்கடி வாசிப்பார். குறிப்பாக டேல் காணர்ஜியில் அவருக்குக் கூடுதல் விருப்பம்; பல நூல்களைச் சேகரித்து வைத்துள்ளார்; அவைபற்றிக் குறிப்பிட்டு என்னையும் வாசிக்கும்படி சொல்லுவார். ஆனால் நானோ, இந்தச் 'சமுதாய ஏணி'யில் அக்கறையற்றவன் என்பதால், சுய முன்னேற்ற நூல்களை வாசிப்பதில்லை. ஆயினும், தனது இலக்கினைத் தேர்ந்து உரிய முயற்சிகளில் ஈடுபடுதல் என்பதில், ஜேசுதாசனின் வாழ்க்கை பலருக்கு உதாரணமாகலாம்.

***





போர்ச்சூழல், இடப்பெயர்வுகள், வடபிரதேசத்தின் வசதிக் குறைபாடுகள் போன்றவற்றால் - பிந்திய காலங்களில் இருவருக்குமான நேரடித் தொடர்பு குறைந்துவிட்டது; இடைக்கிடை சிறிய தொடர்புகள் மட்டும் இருந்தன. ஆனால், அவ்வப்போது சில தகவல்களை வேறு வழிகளில் அறிய முடிந்ததுதான். நீண்ட காலத்தின் பின், 2016-இல் ஜேசு தாசன் யாழ்ப்பாணம் வந்தபோது, எங்கள் வீட்டில் நான் கைந்து நாள்கள் தங்கினார். கனடாவுக்குத் திரும்பும் நாளன்று, தான் கனடா சென்றபின் நானும் மனைவியும் அங்கு வருவதற்குரிய ஒழுங்குகளைச் செய்து அறிவிப்ப தாகவும், இருவரும் கட்டாயம் வரவேண்டு மென்றும் சொல் லிச் சென்றார். மூன்று மாதங்களின் பின், எல்லா ஒழுங்கு களையும் தனது தம்பி ஆசைதாசன் மூலம் செய்து எமக்கு அறிவிக்கவே, இருவரும் 2016 நடுப்பகுதியில் கனடா சென்று, அஜெக்சிலுள்ள ஜேசுதாசனது வீட்டில் இரண்டு மாதங்கள் தங்கினோம். எனது 'நினைவுக் குறிப்புகள்' நூலின் வெளியீட்டு நிகழ்வை, குருநகர் சமூகசேவை அமைப் புடன் இணைந்து அங்கு சிறப்புற ஒழுங்குசெய்தார்.

கனடாவில் அந்த இரண்டு மாதங்கள் மகிழ்ச்சியான பய னுள்ள அனுபவங்களைத் தந்தன. உறவினர்கள் - ஊரவர் களைச் சந்தித்தல் ஒருவகையானால்; தெரிந்த - பழக்க மில்லாத, பல்வேறு துறைசார்ந்த பலரைச் சந்தித்துக் கதைப்பது இன்னொரு வகையில் புதிய அனுபவங்களைத் தந்தது. முக்கியமான இடங்களுக்குச் சென்று பார்க்கும் வாய்ப்புகளும் கிடைத்தன. இந்த வாய்ப்புகளுக்கெல்லாம் ஜேசுதாசனுக்கும் மொனிக்காவுக்கும், நானும் மனைவியும் நன்றிக் கடன் பட்டுள்ளோம் என்றுதான் சொல்லவேண்டும்.

இலங்கை திரும்புவதற்கு இரண்டொரு நாட்களின் முன், முக்கியமானதெனக் கூறிச் சிலவற்றை அவரிடம் குறிப் பிட்டேன். வாழ்க்கையில் செல்வத்தையும் சமூகத்தில் முக் கியமானதோர் இடத்தையும் அவர் பெற்றுவிட்டார். அப்போது கனடா இலக்கியத் தோட்டம் அமைப்பிலும் முக்கியமான ஒருவராக இருந்தார்; எழுத்தாளர் அ. முத்துலிங்கத்துடன் மிக நெருக்கமானவர். அதன் காரணமாகவும் ஒருநாள் இரவு, அ. முத்துலிங்கம் எனக்கும் மனைவிக்கும் தனது வீட்டில் விருந்தளித்தார். ஏற்கெனவே ஒரு நாவலையும் சிறுகதைத் தொகுப்பொன்றையும் வெளியிட்டுள்ளார். ஆகவே இனி, பணம் தேடும் சட்டத் தொழிலில் ஓய்வுபெற்று, அவருக்கு ஈடுபாடுள்ள இலக்கியத்துறையில் கூடுதலாக ஈடுபடவேண்டும்; ஆங்கிலத்திலிருந்து பலவற்றை மொழி பெயர்க்கலாம்; நல்ல விடயங்களைத் தமிழில் அறிமுகப் படுத்தலாம்; சொந்தப் படைப்பு முயற்சிகளிலும் ஈடுபட லாம் என்பவற்றையே அன்று வற்புறுத்தினேன். தனக்கும் அந்த எண்ணம் அடிமனதில் உள்ளதாகவும், சிலவருடங் களில் ஓய்வுபெற்றுச் செயற்படப்போவதாகவும் அவர் சொன்னபோது, நான் அது நல்லதென்றேன்!

இறுதியாக, முகநூலில் வந்த எனது சிறு குறிப்புடன் இதனை முடிக்கலாம்; அது வருமாறு :

*'மரணம் கள்வனைப் போல் வரும்'*
*என்பதை,*
*சமய பாடத்தில்*
*சிறுவயதுமுதல் அறிந்திருந்தாலும்,*
*அதிர்ச்சியான செய்தி இது!*

*'அண்ணன்..!' என்று அழைக்கும்*
*அவனது குரல்,*
*என்றென்றைக்குமாய்*
*இனிக் கேட்கப்போவதில்லை*
*என்பதை,*
*இழப்பின் கசப்புடன்*
*ஏற்பதைத் தவிர,*
*வேறு வழியுமில்லைத்தான்;*
*எனது ஆழ்ந்த அஞ்சலி!*

Jesurasa.A@thaiveedu.com



# அமரர்
# மனுவல் ஆசீர்வாதம் இயேசுதாசன்

**– குயின்ரஸ் துரைசிங்கம்**



சட்டத்தரணி மனுவல் யேசுதாசன் அவர்களது இழப்பு, அவரது குடும்பத்திற்கும் உறவுகளுக்கும் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்கும் ஒரு பேரிழப்பாக அமைந்துவிட்டது.

மிக அற்புதமான ஒரு பண்பாளர். மனித நேயமும் மனித மாண்பும் மனிதப் பண்பும் தெரிந்த, அறம் தவறாது வாழ்ந்த அற்புதமான மனிதர். எந்த நிதியும் பெற்றுக்கொள்ளாமல், இவர் வழங்கிய சேவைகளும் உதவிகளும் ஏராளம். தமிழர் சமூகத்திற்காக தன்னலமின்றி உழைத்த அற்புதமான தன்னார்வத் தொண்டர்.

78 ஆண்டுகள் ஒரு நிறைவான, வெற்றியான, ஊருக்கும் உறவுகளுக்கும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நன்மைபயக்கும் கற்பகதருவாக வாழ்ந்த ஓர் அன்பர். யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், அங்கு ஒரு பன்முகத் திறமைகள் கொண்ட சிறந்த மாணவராக விளங்கினார். பாடற்குழு உறுப்பினர், நாடகங்கள், மேடை நிகழ்வுகளில் முக்கிய அங்கத்தவர், பேச்சுப்போட்டி, விளையாட்டுத் துறை, இல்ல விளையாட்டுப் போட்டிகள் என அனைத்திலும் தனது திறமைகளை வெளிப்படுத்தினார். ஒரு கத்தோலிக்க குருவாக வருவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தி, தனது குருத்துவக் கல்வியையும் மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில், இளைஞராக இருந்தபோது, பழமையும் தொன்மையும் கொண்ட செவ்வியல் தமிழ் நூல்களின் இருப்பிடமான வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் இவர் பணியாற்றினார். அக்காலத்தில் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்த அனைத்து புதிய நூல்களையும் பதிவுசெய்து பட்டியலிடுவதே இவரது பணியாக இருந்தது.

1975-இல் சட்டப்படிப்பை முடித்து, யாழ்ப்பாண நீதிமன்றில் சட்டத்தரணியாகப் பணியாற்றினார். பின்னர், இலண்டன் சென்று சட்ட மேற்படிப்பை முடித்தபின் இலங்கை திரும்பினார். நாட்டின் பிரச்சினைகள் காரணமாக, கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள சிறிய தீவான செஷல்ஸில் சிரேஷ்ட அரச சட்ட ஆலோசகராக வேலை பெற்று, தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் நாட்டிலிருந்து குடிபெயர்ந்தார்.

அங்கு சிலகாலம் பணியாற்றிய பின்னர், 1986-இல் கனடாவிற்கு வந்த அவர், சட்டத்துறையில் காலடி வைத்த காலத்திலிருந்து, தன்னாலியன்ற வகையில் எல்லாம் புதிய குடிவரவாளர்களுக்கு சட்ட ரீதியான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கத் தவறியதில்லை. தனது சட்ட அலுவலகம் ஊடாகவும் குடும்பப் பிரச்சினைகள், கிரிமினல் குற்றங்கள், சொத்து மற்றும் வீடு வாங்க விற்கத் தேவைப்படும் சட்ட அலுவல்கள் என, பல்வேறு சேவைகளை சிறப்பாக வழங்கிவந்தார்.

சேக்கம் சமூகசேவை அமைப்பின் நிர்வாகக் குழுவில் முக்கிய உறுப்பினராக விளங்கிய திரு. மனுவல் ஜேசுதாசன் அவர்கள், அதன் செயலாளராகவும் பணியாற்றி அளப்பரிய சேவை செய்தார். புதிய குடிவரவாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி, பல்வேறு உதவிகளையும் செய்துகொடுத்து, அவர்களது புலம்பெயர்வின் ஆரம்ப அத்தியாயத்தில் காணப்பட்ட சவால்களைக் குறைப்பதற்கு பெரிதும் பங்களித்தார்.

ரொறன்ரோவிற்கு ஏராளமான கத்தோலிக்க குடும்பங்களும் புலம்பெயர்ந்து வந்துகொண்டிருந்த நிலையில், ரொறன்ரோ அதியுயர் கத்தோலிக்க மறைமாவட்டத்தினால் தமிழ் கத்தோலிக்க




மக்களுக்கென வழிபாடுகளை நடத்துவதற்கான ஆரம்ப செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தவர்களில் இவரும் ஒருவர். இதனால் உருவாக்கப்பட்ட தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் நிர்வாகக் குழுவில் ஓர் உறுப்பினராக இணைந்து, அதன் வளர்ச்சிக்கும், அதை ஒரு தமிழ்ப் பங்காக வளர்த்தெடுப்பதற்கும் அரும்பாடுபட்ட அன்பர். பின்னர் உருவாகிய தூய ஆரோக்கிய அன்னை தமிழ் கத்தோலிக்க பங்கின் இருப்பிற்கும், அதன் சிறந்த ஆரம்பகால செயற்பாட்டிற்கும் அயராது உழைத்தவர்.

1993-இல், திருமறைக்கலாமன்றத்தின் இயக்குநர் அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் கனடாவிற்கு வருகை தந்தபோது, அவரது வேண்டுகோளுக்கிணங்க, கனடாவில் திருமறைக் கலாமன்றத்தின் கிளையை நிறுவி, அதன் முதலாவது தலைவராகப் பொறுப்பேற்றார். அவரது சிறப்பான நிர்வாகத்தில், பல கலைஞர்களும் நிர்வாகத் திறமைமிக்கோரும் இணைந்துகொண்டு, ஒரு சில வருடங்களில் கனடா திருமறைக் கலாமன்றத்தை சிறந்த நிலைக்குக் கொண்டுசென்றனர். இவரது தலைமையில், நூற்றுக்கும் அதிகமான ரொறன்ரோ வாழ் சிறந்த கலைஞர்களை உள்ளடக்கியதாக, முதன்முதலில் 'பலிக்களம்' என்ற பாரிய திருப்பாடுகளின் காவியம் மேடையேறி வரலாறு படைத்தது. கே.எஸ். பாலச்சந்திரன், சிவா சின்னத்தம்பி போன்ற முன்னணிக் கலைஞர்களும் பங்கேற்றுசாதனை படைத்தனர்.

1995-இல் ரொறன்ரோ சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க மூன்று நாள் சர்வதேச தமிழ் பண்பாட்டு மாநாட்டை 'சர்வதேச தமிழ் பண்பாட்டு இயக்கம்' நடத்தியது. இந்த பண்பாட்டு இயக்கத்தின் செயலாளராகவும் திரு. மனுவல் ஜேசுதாசன் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தார்.

'தமிழ் இலக்கியத் தோட்டம்' என்ற அமைப்பில் இணைந்து, எழுதவும் பேசவும் பாவிக்கப்படும் தமிழ் மொழிமூல சொற்களின் முக்கியத்துவத்தைப் பற்றிய ஆழமான புரிதலை அவர் வெளிப்படுத்தினார். இவ்வமைப்பின் மூலம், தமிழ் மொழியின் சிறப்புகளை மேம்படுத்துவது, சாதனைத் தமிழர்களை கௌரவிப்பது என, விரிந்துபட்ட பணிகளை மேற்கொண்டார். அத்துடன், மற்றவர்களுக்குக் கல்வி கற்பிப்பதிலும், தமிழ் மொழி, கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் செழுமையை மேம்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளையின் தலைவராகவும், நிர்வாகக் குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். இவர் தலைவராக இருந்த காலத்தில், பல்வேறு கலை நிகழ்வுகளை மேடையேற்றிய பெருமையும் இவருக்கு உண்டு.

திரு. மனுவல் ஜேசுதாசன் அவர்கள் ஓர் ஆற்றல்மிக்க நாட்டுக்கூத்துக் கலைஞர், தானே பாடி நடிக்கக்கூடிய ஒருவர், பிரதான அரச பாத்திரம், மற்றும் அரசிக்கான பெண் பாத்திரம் உட்பட, எந்தப் பாத்திரத்தையும் சிறப்பாக நடித்துவிடக்கூடிய ஆற்றல் அவரிடம் இருந்தது. அத்துடன், நாட்டுக்கூத்துக்களைப் பழக்கி,நெறியாள்கை செய்து மேடையேற்றும் திறமையும் அவரிடம் இருந்தது. பல விதமான நடனங்களையும் தானே நடித்து, மேடை நாடகங்களை மெருகூட்டும் ஆற்றலும் அவரிடம் நிறையவே இருந்தது. சிறந்த மேடைப் பேச்சாளராகவும், தலைமைதாங்குபவராகவும், அறிவிப்பாளராகவும், விமர்சகராகவும், நடுவராகவும், நூல் வெளியீடு மற்றும் பட்டிமண்டபம் போன்றவற்றைத் தலைமை தாங்கி நடத்தும் ஒருவராகவும் சமூகத்தில் நன்கு அறியப்பட்டிருந்தார்.

தான் பிறந்து, வளர்ந்த தனது ஊரான நாவாந்துறையை நெஞ்சார நேசித்த இவர், அவ்வூர் மக்களோடு மிகுந்த வாஞ்சையுடன் பழகினார். அவர்கள் இவரை அணுகும்போதெல்லாம் எந்த உதவியையும் செய்து கொடுக்கும் நல்மனம் கொண்டவராக விளங்கினார். தனது ஊரின் பெருமைகளை எடுத்தியம்புவதில் பெருமையும் கொண்டிருந்தார்.


அண்மைக் காலமாக, கனடாவில் இயங்கும் மூத்தோர் தமிழ் அமைப்புகளில், ஆகக்கூடிய தமிழ் அங்கத்தவர்களைக் கொண்ட ஒன்ராறியோ முதுதமிழர் மன்றத்தின் தலைவராகப் பொறுப்பேற்று, மிகச் சிறந்த பணியாற்றி வந்தார். மூத்தவர்களுக்கு மகிழ்வையும் பிணைப்பையும் ஏற்படுத்தும் நிகழ்வுகளையும் கற்றல் அமர்வுகள், வெளிநாட்டுக் குழுப் பயணங்களையும் ஏற்பாடு செய்தார். இவ்வருடம் நடைபெற ஏற்பாடாகியிருந்த இந்த அமைப்பின் 40-வது ஆண்டு விழாவிற்காக அதிகபட்ச ஈடுபாட்டுடன் உழைத்துக்கொண்டிருந்த வேளை, யாரும் எதிர்பார்க்காமல் இவரது பிரிவு நடைபெற்றுவிட்டது.

சிறந்த பாடகர், நகைச்சுவையாளர், நல்ல வாசகர், பேச்சாளர், தொகுப்பாளர், நெறியாளர், நடிகர், கூத்துக் கலைஞர் என இவரது சிறப்புகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். இவரது மனைவி திருமதி. மொனிக்கா அவர்களை தன்னோடு எப்போதும் அழைத்து வருவார். மிகவும் அன்பான, அன்னியோன்னியமான, அனைவரையும் மலர்ந்த முகத்துடன் வரவேற்று உரையாடும் பண்பாளர்கள். தாம் செய்கின்ற எதையும் வெளியே சொல்லி தம்பட்டம் அடிக்காமல், வேகமாக இருவரும் அடுத்த பணிக்குச் சென்று விடுவார்கள். தமிழ் சமூகத்திற்கு இவ்வளவு தூரம் தொண்டாற்ற இடமளித்து, இவருக்கு ஆதரவாக இருந்த இவரது மனைவி திருமதி மொனிக்கா அவர்களுக்கும் எமது தமிழ் சமூகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

திரு. மனுவல் ஜேசுதாசன் அவர்களது இழப்பு, கனடா வாழ் தமிழ் சமூகத்திற்கு ஒரு மிகப்பெரிய வெற்றிடத்தை உருவாக்கியிருக்கிறது என்று கூறினால் அது மிகையில்லை.

எனது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய அன்பு நண்பரும் ஆர்வலருமான திரு. மனுவல் ஜேசுதாசன் அவர்களது ஆன்மா நித்திய இளைப்பாற்றி அடைய, இறையாசி வேண்டிநிற்கிறோம்.

Quintus.Thuraisingham@thaiveedu.com



# உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

**- குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்**

பல்துறைப் புலமையாளரும், சட்டத்துறைசார் நிபுணரும், சமூக ஆர்வலருமான பெரியவர் மானுவல் ஆசீர்வாதம் ஜேசு தாசன் அவர்கள் மார்ச் 22 அன்று எம்மை விட்டுப் பிரிந்த மிகக் கனமான இப்பொழுதுகளில், இப்பெருமகனார் தலைமை தாங்கி (2024 ஓகஸ்ட் 16 - 2026 மார்ச் 22) வழிநடத்திய ஒன்ராறியோ முது தமிழர் மன்றத்தில் இவர் வழங்கிய அளப் பரிய சேவைகள், பங்களிப்புகள் குறித்து எண்ணுவதே இப் பத்தியின் நோக்காகும்.

***'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது***
***தள்ளினுந் தள்ளாமை நீர்த்து'***

'நாம் மனதில் எப்போதும் உயர்ந்த எண்ணங்களைத் தாங்கி யவாறே செயற்படவேண்டும். அவை உடனடியாக நனவாக வில்லை என்றாலும், அந்த எண்ணங்களை மறந்துவிடக் கூடாது. அந்த எண்ணங்களே நம்மை அடைய வேண்டிய உயரத்தை நோக்கி இட்டுச் செல்லும்.

நம் மன்றத்திற்கு நிரந்தரப் பணியகம் அவசியம் என்பதை உறுதியாக எண்ணினோம். அந்த எண்ணம் இன்று நிறைவேறி நம் மன்றினை புதிய உயரத்திற்கு இட்டுச்செல்லவில்லையா? இது போன்று பயன் தரும் எண்ணங்களைத் தொடர்ந்து விதைக்க வேண்டும்.

'என் மனதில் உதித்துள்ள பலவற்றுள் நம் மன்றிற்கு வரு மானம் ஏற்படுத்தும் நிறுவனம் ஒன்றை மாகாண சட்ட விதிக ளுக்கமைய அமைக்கவேண்டும் என்பதும் ஒன்று என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்' என முது தமிழர் மன்றத்து 39-ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய தலைமை யுரையின் போது அமரர் ஜேசுதாசன் அவர்கள் கூறியிருந் தமை நேற்றுப்போல இன்னமும் எம்மனத்திடையே எதிரொலித் துக்கொண்டிருக்கிறது.

ஒன்ராறியோ முது தமிழர் மன்றம் 2026 ஜனவரி 14 தைப் பொங்கல் தினத்தில், தனது நாற்பதாவது ஆண்டில் தடம் பதித்தது. இதனையொட்டி வெளிவந்திருந்த மன்றத்தின் 'சங் கநாதம்' காலாண்டுச் செய்தியிதழில் ஒன்ராறியோ முது தமிழர் மன்றத்துடனான என் பயணம் மூன்று தசாப்தங்களுக்கு முன் ஏற்பட்டது. சட்ட ஆலோசகராக எனது உறவு ஆரம்பித்தது என்ற வாக்குமூலத்துடனேயே தமது தலைமைக்குறிப்பை ஆரம்பித்திருந்தார் மானுவல் ஜேசுதாசன் அவர்கள்.

மன்றத்தின் செயற்பாடுகளில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த இவர் 2006 நியூ ஹொரைசன் ஆதரவுடன் முன்னெடுக்கப் பெற்ற 'Seniors and Youth in Synergy' - முதியோர் இளை யோருக்கான பாலம் எனும் ஒரு வருடத் திட்டத்தில் நடை பெற்ற கருத்தரங்குகள், தகவற் பட்டறைகள் ஆகியவற்றில் கலந்து பல்வேறு சிறப்புரைகளை ஆற்றியிருந்தார். முது தமிழர் மன்றத்துடன் தமக்கிருந்த ஈடுபாட்டினை மெய்ப்



பிக்கும் வகையில் 2008 ஜனவரியில் தம்மை அங்கத்தவராக இணைத்து இருந்தார். 2011 - 2012 காலப்பகுதியில் திரு. SMJ இம்மானுவேல் தலைமையிலான இயக்குனர் சபையில் உப-தலைவராகத் திறம்படச் செயலாற்றி அனைவரது பாராட்டு தலுக்கும் உரியவரானார்.

இவரது தந்தை மானுவேல் ஆசீர்வாதம் பிரபல்யமான நாட்டுக்கூத்து அண்ணாவியார், இதனால் இயல்பாகவே இக்கலை மீது நாட்டம் கொண்டிருந்த இவர், தந்தையாரின் நெறிப்






படுத்துகையிலேயே மேடை நிகழ்ச்சிகளில் கூத்துக் கலைஞனாக மிளிர்ந்து வந்தார். புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகள் மாறிய வேளையிலும் இக்கலையைத் தம்முடனேயே எடுத்துச்செல்வதும், பேணி வளர்ப்பதும் மிகவும் பாராட்டுதற்குரியவொன்றே.

முது தமிழர் மன்ற விழாக்களில் சத்தியவான் சாவித்திரி போன்ற கூத்துகளிலும், புதியதோர் உலகம் செய்வோம், சங்கே முழங்கு உள்ளிட்ட பல்வேறு நாடக, இசைநாடக நிகழ்வுகளிலும் தமது முத்திரையைப் பதித்துப் பலரது அபிமானத்தையும் தம்பால் ஈர்த்தவர். இவ்வகையில் முது தமிழர் மன்றத்தின் பரிமாணத்தையும் வீரியமாக்கியவர்.

2022-2024 கால இடையில் முது தமிழர் மன்றம் திரு. சீ. மகேந்திரா தலைமையிலான இயக்குனர் சபையால் நிர்வகிக்கப்பெற்ற வேளை, வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட சொந்த அலுவலகம் அமைக்கும் பணியில் சட்டவாளரான ஜேசுதாசன் அவர்களின் அபரிமிதமான பங்களிப்பும், ஆலோசனைகளும் தமக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்ததென சீ, மகேந்திரா அவர்கள் மனநெகிழ்ச்சியோடு கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். 2020 - 2022 காலப் பகுதியில் சீரமைக்கப்பட்டிருந்த முது தமிழர் மன்றத்து அமைப்புவிதி (constitution) 2024-இல் மன்றத்திற்கான சொந்தப் பணிமனை அமையப்பெற்ற காரணத்தினால் சில திருத்தங்களுக்கு உட்படவேண்டியிருந்த தருணத்திலும் அமரர் ஜேசுதாசன் அவர்களின் காத்திரமான பங்களிப்பு சுட்டிக்காட்டத் தகுந்தது.

ஒன்ராறியோ முது தமிழர் மன்றம் தங்கள் அங்கத்தவர்களைப் புத்துணர்வூட்டும் நோக்கில் ஆறு மாதத் திட்டமொன்றினை 'Empowering Seniors Through Cultural Engagement and Elder Abuse Prevention' ( ஜனவரி - ஜூன் 2025 ) மிக நேர்த்தியாக ஒழுங்கமைத்திருந்தது. மன்றத் தலைவராக அமரர் ஜேசுதாசன் அவர்கள் மிகுந்த சிரத்தையோடு Financial Abuse Workshop, Physical Abuse Workshop, Mental & Verbal Abuse Workshop போன்ற தகவற் பட்டறைகளில் தானும் ஒரு உரையாளராகக் கலந்துகொண்டு தம் பங்களிப் பினை வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது. மேலும், முது தமிழர் மன்ற அங்கத்தவர்களுக்கான சட்ட ஆலோசனைகளையும் 2024 ஜூலை தொடக்கம் இலவசமாக வழங்கிவந்தார் என்பதை நாம் நன்றியுடன் இக்கணத்தில் நினைவிற் கொள்வோம்.

1948 மார்ச் 26-இல் பிறந்த இவர், 1972-இல் இலங்கைச் சட்டக்கல்லூரியில் இணைந்து, 1975-இல் சட்டத்தரணியாகி, மூன்றாண்டுகள் அங்கேயே பணியாற்றிய பின் இங்கிலாந்து, வேல்ஸ், சீசெல்ஸ் போன்ற நாடுகளில் சேவையாற்றி 1986-இல் தம் குடும்பத்தினருடன் கனடாவை வந்தடைந்தார்.

1994-இல் ஒன்ராறியோ மாகாண சட்டத்தரணியாக தமது சேவையை வழங்க ஆரம்பித்த இவர் அதே ஆண்டில் 'தொண்ணூறு நாட்கள்' எனும் நாவலையும், 2007 இல் 'வயது பதினாறு' சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டு சமூகத்தின் சகல தரப்பினரது அபிமானத்தையும், அன்பையும், மதிப்பையும் பெற்றுக்கொண்டார்.

பல்வேறு பொது அமைப்புகளிலும் தம்மை இணைத்துக் கொண்டு சமூக அக்கறையுள்ள மனித நேயராக, சட்டத்துறை சார் நிபுணராக, அன்புசால் குடும்பத் தலைவராக, ஒன்ராறியோ முது தமிழர் மன்ற தகைசால் தலைமைப் பண்பாளராக வாழ்ந்து எங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக நம் இதயங்களில் என்றும் நிலைத்திருக்கும் பெரியவர் ஜேசுதாசன் அவர்களின் குடும்பத்தினர், உறவினர் மற்றுமவர் நட்புகளோடு நாமும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.



jegatheeswaran@thaiveedu.com

உரமேறிய சோழகத்தில் அணியம் உயர்த்திச் சீறிப்பாய்ந்த பாய்மரத் தோணி எப்படிச் சாய்ந்தது ?

எங்கள் தோட்டத்தில் வானளாவி உயர்ந்த விருட்சம் ஏன் சரிந்தது ?

நினையாதது, நினையாத நேரத்தில் ஏன் நிகழ்ந்தது ?

காற்றிலும், நட்சத்திரங்களிலும், நிலவிலும் திசையறிந்த எம்மில் தனக்கென திசையமைத்த திசைகாட்டி ஏன் நின்றுபோயிற்று ?

வழிகாட்டியற்ற வழிகாட்டி இன்று ஏன் வழிமாறியது ?

இளைப்பாறா உழைப்பாளி ஏன் நித்தியத்தில் இளைப்பாறினார் ?

விடையறியா வினாக்களுக்கு மனம் ஏன் விடைதேடுகிறது ?

யார் இந்த விருட்சம் ?

அதன் வளர்ச்சிப் படிமங்களில் அதன் வேர்கள் உறுஞ்சி எடுத்த கனி மங்கள் எங்கிருந்து வந்தன ? எங்கிருந்து பெற்ற மூலகங்களிருந்து அந்த விருட்சத்தின் தொகுப்புகள் நிகழ்ந்தன ?

எந்தத்தாக்கிகளின் இடைவினை இந்த விருச்சத்தினை வளர்த்தெடுத்தது ?

மனுவல் ஆசீர்வாதம் யேசுதாசன்!



# ஓர் அலையின் ஆக்கம்...

- பீற்றர் மனுவல்பிள்ளை

யாழ்ப்பாணத்தில் நாவாந்துறை என்ற ஊரில் 1948-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26-ஆம் நாள் மனுவல் ஆசீர்வாதத்திற்கும் இன்நேசம் பிரகாசிக்கும் மூத்த மகனாக - இரண்டாவது பிள்ளையாக யேசுதாசன் பிறந்தார். சிறுவயதிலேயே அவரிடத்தில் சுறுசுறுப்பும், உலக நடப்பு பற்றிய ஆர்வமும் அவதானிக்கப்பட்டது. மேலும் இச்சிறு வயதில் நாவாந்துறையில் 1950-களில் மேடையேற்றப்பட்ட இம்மனுவல் நாட்டுக்கூத்தில் இவர் கட்டியகாரனாக நடித்தார். தந்தையாருக்கு நாட்டுக்கூத்து எழுத்துருக்களைப் பிரதி செய்து உதவினார். இளைஞ னாக மற்றைய நண்பர்களுடன் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் பல நாடகங்களில் நடித்தார். ஆரம்பக்கல்விக்காக யாழ்ப் பாணத்திலுள்ள கொழும்புத்துறை அரச பள்ளியில் சேர்க்கப்பட்டார். அங்கு ஒரு திருப்புமுனைச் சம்பவம் நிகழ்ந்தது.




ஒரு நாள் கல்வி அதிகாரி ஒருவர் இவர் வகுப்பிற்கு மேற்பார்வைக்கு வந்தபொழுது, அவரின் பல வினாக்களுக்கு இவரின் பதில்கள் வியப்பை ஊட்டின. ஆகவே கல்வி அதிகாரி தன்னைக் காணவரும்படி இவரின் தகப்பனாருக்கு ஒரு குறிப்பை எழுதி அனுப்பியிருந்தார். இவரது தந்தையைச் சந்தித்த அந்த கல்வி அதிகாரி, தான் சிபார்சுக்கடிதம் தருவதாகவும் இவரைப் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் (St. Patrick's College) சேர்க்கும் படியும் தந்தையாரை வற்புறுத்தினார். இந்த வகுப்பின் ஆசிரியரான ம.செ. அலெக்சாந்தரினதும், அந்தக் கல்வி அதிகாரியினதும் தூண்டுதலால் யேசுதாசன் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். பொதுவாக கத்தோலிக்க குடும்பங்களில், தங்கள் தலை சிறந்த பிள்ளைகளைத் திருச்சபையின் பணிக்காக அனுப்பும் உந்துதல் காணப்பட்ட காலத்தில், சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்விகற்கின்றபொழுது, கத்தோலிக்க குருவானவராக பயிற்றுவிப்பதற்கு யேசுதாசன் கொழும்பிலிருந்த ஒரு குருமடத்திற்கு அனுப்பப்பட்டார். அங்குகற்றபோது மொழிகளைக்கற்கும் ஆர்வம் மேலெழுந்தது என நம்புகின்றேன். தமிழில் மட்டுமல்லாது, ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. இந்தமூன்று மொழிகளிலும் அச்சுப்போல அவர் கையெழுத்துகள் இருக்கும். ஏதோ காரணத்தால் அவரின் குருமடக் கல்வி முடிவுக்கு வந்தது. வீட்டு நிலமை காரணமாக கூறப்பட்டாலும் திருச்சபை ஒரு நல்ல ஊழியனை அல்லது தலைவனை இழந்தது என நம்புகிறேன்.

கல்வியில் நாட்டம் குன்றி கடற்தொழிலுக்கு செல்வதற்கான எண்ணம் இவருக்குத் தோன்றியபோது, இவரது தந்தையார் ஒரு விடயத்தைச்செய்தார். யேசுதாசனை வள்ளத்தின் அணியத்தில் இருக்கவைத்து அன்றைய பொழுது தொழிலுக்கு அழைத்துச் சென்றார். வள்ளத்தில் ஏற்பட்ட ஆட்டமும், குலுக்கலும் அவரை பலமுறை வாந்தி எடுக்கவைத்தது. இந்தத் தொழிலும் சவால் நிறைந்தது என்பதை யேசுதாசனுக்கு உணர்த்தவே இவரது தந்தை அவ்வாறு செய்தார். அதன்பின்னர் க.பொ.த சாதாரண தேர்வுக்கு தன்னைத் தயார் செய்து அதில் சித்தி எய்தினார். குறிப்பாக ஆங்கிலப் பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்றார். இந்தச் சித்தி அவரை யாழ். பொதுசன நூலகத்தில் தற்காலிக அலுவலராகப் பணிசெய்ய உதவியது. இதன்போதுதான் புத்தகங்களின் பாகுபாட்டு சிட்டைகள் பல இவர் கையெழுத்துகளால் எழுதப்பட்டன. இதுபற்றிய நினைவுகளை இவர் ஒரு காணொளியில் பதிவுசெய்துள்ளார். மேலும் யாழ். பொது நூலகம் எரிந்த செய்தி அறிந்தபோது புத்தகங்களின் பகுப்புச்சிட்டைகளிலிருந்த தன் முத்துமுத்தான கையெழுத்துகளும் எரிந்து



போனதை என்னிடத்தில் கூறி வருத்தப்பட்டதை இப்பொழுதும் நினைக்கின்றேன். இந்த நூலகப் பணி தனது வாழ்வின் இன்னொரு திருப்புமுனையாக அமைந்ததாக இவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாநகரசபையின்கீழ் இயங்கிய நூலகத்திலிருந்து இவர் மாநகரக் களஞ்சியசாலைக்கு மாற்றலாக்கிப் பணியாற்றும்போது இலங்கைச் சட்டக்கல்லூரிக்கான புகுமுகத்தேர்வில் தேர்ச்சிபெற்றுப் பின்னர் சட்டக்கல்வியை நிறைவுசெய்தார். சட்டக்கல்லூரிக்கான அனுமதிக் கடிதம் கிடைத்ததும் அதனைத் தன்வீட்டில் தெரிவித்தபோது அங்கு ஒரு குழப்பநிலை இருந்தது. இவர் தந்தையார் இவரைக் கல்விகற்க தூண்டியது ஒரு அரச உத்தியோகத்தில் சேர்வதற்காகத்தான். ஆனால் இப்படியொரு உயர்கல்வியை தன்மகன் தேர்ந்தெடுப்பார் என நினைக்கவில்லை.



இவரது தந்தை ஆசீர்வாதம் ஊரிலிருந்த வலிமையான ஆளுமைகளுள் ஒருவர். சாமர்த்தியமாக நிலமைகளைக் கையாளக்கூடியவர். ஒரு நாட்டுக்கூத்து அண்ணாவி. பல வருடங்கள் விளையாட்டுத் துறை தலைவராக இருந்து விளையாட்டு களுக்கு ஊக்கமளித்தவர். நாவாந்துறை பரலோக மாதா ஆலய உருவாக்கத்திலும், அதன் நிர்மாண பணிகளிலும் தீவிரமாக பணியாற்றியவர். ஆலய பங்குத்தந்தைகளுக்கும், மற்றவர்களுக்கும் ஊரின் நிலமைகளை எடுத்துக்கூறி வில்லங்கங்களை விலக்கக்கூடியவர். எடுத்த காரியங்களை முழுமையாக முடிப்பதில் கருத்தாயிருப்பவர். மதிப்புக்குரிய மனிதனாக வாழ்ந்து முடித்தவர்.

யேசுதாசனின் தந்தை மனுவல் ஆசீர்வாதம் இலங்கைத் தமிழ்காங்கிரசின் பெரும் ஆதரவாளர். தமிழ்காங்கிரசின் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களை நாவாந்துறையின் விடயங்கள் தொடர்பாக பலமுறை சந்தித்திருக்கிறார். தமிழ்க் காங்கிரசின் முதன்மை உறுப்பினர் 'புறொக்ரர்' சங்கரப்பிள்ளையுடன் ஊர் விவகாரங்களில் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்.

இவ்வாறானவர்கள் கற்ற சட்டக்கல்வியைத் தன் மகன் கற்கமுடியுமா என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது. இதனால் அவர் முடியாதவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படக்கூடாது எனக் கூறினார். 'நான் முடியாதவனல்ல மலையேறி கொம்புத்தேன் கொணர்வேன்' என சபதம் எடுத்தார் யேசுதாசன். அதனையும் செய்து முடித்தார்.

இவரின் தாயார் பிரகாசி, என்ன செலவானாலும் நாங்கள் பார்த்துக்கொள்வோம் நீ போய் படி எனக் கூறினார். இவரின் தாயார் பல முயற்சி களுக்கூடாக இவரின் கல்விச் செலவுகளுக்கும் பங்களிப்புச் செய்தார். இவரின் தாயார் கைவைத்தியத்தில் சிறந்தவர். ஊரில் பலரும் அவரிடத்தில் வைத்தியம் செய்துகொண்டனர். சட்டக்கல்வியின்போது இவருக்கு ஏற்படக்கூடிய சவாலை இவரின் முழுக் குடும்பமும் ஏற்றுக்கொண்டது.

சட்டக்கல்லூரியில் படிக்கும்போதே ஊரில் இளைஞர்களை விளையாட்டில் ஊக்கப்படுத்தி அவர்களைச் சரியான பாதையில் கொண்டுசெல்லவேண்டும் என்ற எண்ணம் இவருக்கு இருந்தது. கொழும்புலிருந்து விடுமுறைக்கு வந்தபோது உதைபந்தாட்டத்தில் ஆர்வமுள்ளவர்களைத் திரட்டி மூன்று அணிகளாகப் பிரித்து ஓர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்தினார். இதற்காக ஒவ்வொரு விளையாட்டு வீரர்ருக்கும் உதைபந்தாட்டக் காலணிகளை (Adidas boots) பெற்றுக்கொடுத்தார். தாங்கள், காலணிகளுடன் விளையாடிய அனுபவத்தை முதல் தடவையாக பெற்றுக்கொண்டதாக இன்றும் பலர் நினைவுகூர்கிறார்கள். யேசுதாசன் தன்னார்வமாக ஆட்களைத் திரட்டுவதிலும், சமூகப் பணிகளை மேற்கொள்ளவதிலும் அவரிடமிருந்த திறன்களின், தலைமைப் பண்புகளின்





உருவாக்கம் இவரது தகப்பனாரிடமிருந்தும், ஊரிலிருந்தும் உருவாகின என எண்ணுகின்றேன். குறிப்பாக இவர் தந்தை யாரிடமிருந்து கற்றுக்கொண்டாரென எண்ணுகின்றேன்.

மனுவல்யேசுதாசன் 1975-இல் சட்டத்தரணியாக சத்தியப்பிர மாணம் எடுத்ததைக் கொண்டாடும் முகமாக இவருக்கு ஒரு வரவேற்பு நிகழ்வு நாவாந்துறையில் நிகழ்ந்தது. யாழ்ப் பாணத்திலுள்ள பல பிரமுகர்களும், இவரது சட்டக்கல்லூரி நண்பர்களும், ஊரைச் சார்ந்தவர்களும் கலந்துகொண்டனர். அங்கு உரையாற்றிய சட்டக்கல்லூரி நண்பர் ஒருவர் 'யேசு தாசன் துணிச்சல்காரர் மட்டுமல்ல துணிதெரிவதிலும் கெட் டிக்காரர்' எனக் கூறினார். இதன்பின்னர் மற்றுமொரு வர வேற்பு மெலிஞ்சிமுனை - கரம்பனிலும் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. இவ்வரவேற்புகள் ஊரில் கல்வி தொடர் பான ஒரு விழிப்புணர்வுக்கும், இவரின் சட்டவாண்மை விருத் திக்கும் உதவுவதாக அமைந்தன.

யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணியாக தொழில்புரியும்போது, 1976-இல் மொனிக்கா ஆசீர்வாதம் அவர்களைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் பிறந் தனர்.

தொடர்ந்து கல்விகற்கும் நோக்குடன் முதலில் பிரான்சிற்கும், பின்னர் பிரித்தானியாவுக்கும் சென்று அங்கு சட்டக்கல்வி கற்று 1980-இல் சொலிசிற்றர் (Solicitor in England and Wales) தகமையைப் பெற்றார். இலங்கை திரும்பியபின் சில காலம் சட்டத்தரணியாக தொழிலைத் தொடர்ந்தார். இதன் பின்னர் சீசெல்ஸ் நாட்டில் மூத்த அரச வழக்கறிஞராக 1982-1986 பணியாற்றினார். சீசெல்சில் 1981-இல் நடந்த ஆட்சிக்க விழ்ப்பு தொடர்பான வழக்கில் இவர் அரச வழக்கறிஞராக கட மையாற்றினார். பின்னர் கனடா நாட்டிற்குப் புலம்பெயர்ந்து கனடாவிற்கான சட்டக்கல்வியைக் கற்று வழக்கறிஞராக இறக்கும்வரை சேவையாற்றினார்.

கனடாவில் புலம்பெயர் தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டு பல சமூகப்பணிகளை ஆற்றியதுடன் பல பண் பாட்டு நிகழ்வுகளை ஒழுங்குசெய்வதிலும், மற்றும் எழுத்து, கலை, பண்பாட்டு முயற்சிகளிலும் தானும் பங்குகொள்வதி லும் ஈடுபட்டார். இவற்றிற்கான அடித்தளம் இவர் சிறுவனாக இருந்தபோதே இடப்பட்டது. இதுவே கனடாவில் இவரின் அத் திவாரமாயும் அமைந்தன என நம்புகின்றேன்.

ஒரு பேராளுமை, சமூக அக்கறையுடன் செயல்பட்டவர், எங்கள் பலரின் கல்வி முயற்சிகளுக்கு வழிகாட்டியாக நின்றவர், தனக்கென வழிகாட்டிகள் இல்லாத போதும் தன்னை வளர்த் துக் கொள்வதில் மட்டுமல்லாது எங்களில் பலருக்கு முன் னோடியாக இருந்து வழிகாட்டியவர். தான் சந்திக்கின்ற எவ ரையும் ஆழ்ந்து நோக்கி அவர்களின் திறமைகளை வெளிக் கொணர ஊக்குவிப்பவர். கனடாவின் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் உருவாக்கத்தின் பல தொடக்கங்களின் விதை இவரிடத்திலிருந்து வந்தது எனலாம்.

நினையா நேரத்தில் 2026 மார்ச் மாதம் 22-ஆம் நாள் திரு. மனுவல் யேசுதாசன் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தார். இவரது இறுதி அஞ்சலி நிகழ்வு களிலும், சமூகவலைத்தளங் களிலும் இவர் பற்றி பலரின் கருத்துகள் இவரது சமூகப் பணியை எடுத்துரைத்தன. அன்னாரின் ஆன்மா சாந்தியடை வதாக.



Peter.Manuelpillai@thaiveedu.com